இது ஒரு மத நூலல்ல
இது ஒரு பொது நூல்

திருக்குர்ஆன் சொல்லும் அரசியல் அமைப்பு முறை

தொகுப்பாளர்
எம்.பி.ரபீக் அஹ்மத்

RAFEEQ-E-MILLATH PUBLICATIONS
Old.No.24, Mukhtharunnisa Begum Street, 6th Lane,
Mount Road, Chennai - 600 002. Ph : 28589604

[illegible] அரசியல் அமைப்பு முறை.

[illegible]

எல்லாம் வல்ல இறைவனின் திருப்பெயரால்—

திருச்சி - 620 009.

மனிதன் என்ன நினைத்தான்?

எப்பொழுது மனிதன் மற்ற மனிதர்களுடன் சேர்ந்து வாழ ஆரம்பித்தானோ- அப்பொழுது அவனுடைய சுயநலன்கள் மற்றவர்களின் நலன்களுடன் மோத ஆரம்பித்தன.

இந்த மோதல்களினால் - அவர்கள் மத்தியிலே - சண்டைகளும், சச்சரவுகளும்-தொடங்கின. இந்த மோதல்களை எப்படியாவது தவிர்க்க வேண்டும் . சமுதாயத்தில் இவைகள் ஒரு கலகமாக - கலவரமாக வளர்ந்து விடக்கூடாது. சமூகத்திலே ஒற்றுமையும் - அமைதியும் - நிலவ வேண்டும் என்கின்ற அவசியத்தை , அவர்கள் முதன் முதலில் உணர ஆரம்பித்தார்கள். இந்த உணர்வு - ஒரு அரசியல் முறை என்ற கண்ணோட்டத்தை அவர்களுக்க உருவாக்கித் தர ஆரம்பித்தது.

இதன் ஆரம்பம் - இதன் தேவையை மனதில் வைத்து தான் - தொடங்கியது. ஆனால் யார் இந்த சண்டைகளையும் - சச்சரவுகளையும் தீர்த்து வைக்க - பஞ்சாயத் செய்ய - முன்வந்தார்களோ - அவர்கள் ஒரு விஷயத்தை உணர்ந்தார்கள்.

தங்கள் கட்டளைகளுக்கு - மற்றவர்களை அடிபணிய வைப்பதில் - ஒரு இன்பம், ஒரு சுவை, ஒரு சுகம், இருக்கின்றது என்பதை அவர்கள் அறிந்துக் கொண்டார்கள். ஆகவே இந்த மேலாண்மை- தங்கள் கரங்களிலிருந்து நழுவி விடக்கூடாது என்பதற்காக பல விதமான சூழ்ச்சிகளையும் -தந்திரங்களையும் செய்யத் தொடங்கினார்கள். இதனால் சமுதாயம் - இரண்டு வர்க்கங்களாக பிரிந்து போய்விட்டது. ஒரு வர்க்கம் ஆளும் வர்க்கம் என்றும்- இன்னொரு வர்க்கம் - ஆளப்படும் வர்க்கம் என்றும் அழைக்கப்படடன. சில நேரங்களிலே - ஆளும் வர்க்கத்திடம் இருந்து - அவர்களிடம் இருக்கின்ற அதிகாரத்தை கைப்பற்ற - இன்னொரு கூட்டம் எழுந்து நிற்கும்.

சகோதரர்களே! சிந்தித்துப் பாருங்கள் . மனித குலத்தின்

வரலாறு முழுவதும் இந்த மோதலின் கதையாகவே இருக்கின்றது. அதாவது:

1) ஆளும் வர்க்கம் விரும்புகின்றது. தன்னுடைய ஆதிக்கப்பிடி அல்லது முடிச்சு - நாளுக்கு நாள் அதிகமதிகம் இறுகிக்கொண்டே போக வேண்டும் என்று விரும்புகின்றது.

2) அதிகாரம் தங்கள் கைகளுக்கு வர வேண்டும் என்று எதிர் கட்சிகள் ஆசைப்படுகின்றன.

3) ஆளப்படுகின்ற பிரஜைகள் -அரசுகளை எதிர்த்து போராடுகின்றார்கள். ஆளும் வர்க்கம் அவர்களை அடக்கி வைக்க அனைத்து உபாயங்களையும் செய்கின்றது.

4) அறிவு ஜீவிகள் யோசிக்கின்றார்கள். சமுதாயத்திலே ஒரு அரசியல் அமைப்பும் நீடிக்க வேண்டும். ஆளுபவர்களுக்கும் - ஆளப்படுபவர்களுக்கும் மத்தியிலே - எந்த மோதலும் வரக்கூடாது. இதற்காக என்ன வழிகளை கையாளலாம் என்று அவர்கள் சிந்திக்கின்றார்கள்.

இந்த பிரச்சனைக்கு திருக்குர்ஆன் என்ன தீர்வை தருகின்றது? என்பதை பார்ப்பதற்கு முன்னால் - இதற்காக மனிதர்கள் எவ்வாறெல்லாம்- முயற்சித்திருக்கின்றார்கள் என்ற கதையை - அந்த வரலாற்றை- நாம் கொஞ்சம் பார்த்துச் செல்வோம்.

ஆரம்பத்தில் மனிதன் குழுக்களாகவும் கோத்திரங்களாகவும் - (Tribes) வாழ்ந்து வந்தான். அதாவது ஒரு குடும்பத்தில் உள்ள நபர்கள் ஒன்றாக இணைந்து வாழ்வார்கள். அவர்களை கோத்திரங்கள் என்று அழைத்தார்கள்.

குடும்பத்தலைவன் - அதாவது மூத்தவன், அனைவரின் மதிப்பிற்க்கும் மரியாதைக்கும் உரியவனாக கருதப்பட்டான். ஆகவே அவர்கள் மத்தியில் எழும் சர்ச்சைகளை, தீர்த்து வைக்கும் கடமை அவனை சார்ந்ததாக இருந்தது. அவன் தரும் தீர்ப்பை மற்றவர்கள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற விதியும் இருந்தது.

போக போக இந்த குடும்பத்தலைவர்களின் உள்ளங்களில் அதிகாரம் செலுத்தும் ஆசை அலை மோத ஆரம்பித்தது. அவர்கள் தங்கள் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளவும் அதை உறுதிபட நிலைநாட்டிக் கொள்ளவும் திட்டங்களை தீட்டலானார்கள்.

ஆகவே தாய் தந்தையரை மரியாதை செய்வதும், அவர்களுக்கு வணங்கி வாழ்வதும், முதல் முக்கிய கடமையாகும் என்கின்ற நம்பிக்கை உருவாக்கப்பட்டது. அதாவது முன்னோர்களை, பெரியார்களை வணங்குதல் என்பது இந்த நம்பிக்கையின் வளர்ச்சியடைந்த ஒரு முகமேயாகும்.

மனித வாழ்வின் தொடக்க காலத்தில், மத குருமார்களுக்கு (Priest) மிகப்பெரிய அந்தஸ்த்து இருந்து வந்தது. (இப்பொழுதும் கூட எங்கெல்லாம் அறியாமையும், மூட நம்பிக்கையும் பரவியுள்ளதோ, அங்கெல்லாம் மதக் குருமார்கள் வணங்கப்படுகின்றனர்.)

அவர்கள் அதிசயப்பிறவிகளாகவும் கருதப்பட்டனர். எல்லோரும் அவர்களை கண்டு அஞ்சினர். அவர்களின் கட்டளைகளை மீறுவது என்பது அவர்களால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத ஒன்றாக இருந்தது. மக்களின் இந்த மூட நம்பிக்கையை, மத குருமார்கள் தங்களுக்கு சாதகமாக , நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டார்கள்.

அவர்கள் தங்கள் அதிகாரத்தை வணக்கஸ்தலங்கள் என்கின்ற நான்கு சுவர்களுக்கு அப்பால் - அரசாங்க அலுவல்கள் வரை கொண்டு சென்றார்கள். தங்களுக்கும் இறைவனால் அளிக்கப்பட்ட அதிகாரங்கள் (Divine Rights) இருக்கின்றன என்ற நம்பிக்கையை கொண்டு வந்தார்கள். அதாவது தங்களை ஆளுவதற்காகவே ஆண்டவன் பிறக்க வைத்துள்ளான் என்றும், தங்கள் கட்டளைகள், இறைவனுடைய கட்டளைகள் என்றும், அவற்றை பின்பற்றுவதும் இறைவனை பின்பற்றுவதும் ஒன்று என்றும், இப்படிப்பட்டவர்களுக்கு இம்மையிலும், மறுமையிலும் மாபெரும் தண்டனை கிடைக்கும் என்றும் மக்களை நம்ப வைத்தார்கள்.

ஆட்சி செய்துக் கொண்டிருந்தவர்கள் இதை பார்த்தார்கள் . மக்களை பணியவைக்கும் காரியத்துக்கு இந்த வழிமுறை மிகவும் எளிதாக இருக்கின்றது. இங்கே மக்களின் உடல்கள் மீது மட்டும்

ஆட்சி நடப்பதில்லை. அவர்களுடைய உள்ளங்கள் மிதும் ஆட்சி நடக்கின்றது.

இங்கே ராணுவத்திற்கோ - போலிசுக்கோ, எந்த வேலையும் இல்லை. அரசாங்கம் தன்னுடைய பாதுகாப்பிற்காக எந்த செலவும் செய்ய வேணடிய தேவையில்லை. ஆகவே மன்னர்களும் ஆட்சியாளர்களும் - மத குருமார்களுடன் சமரசம் செய்துக் கொண்டு , கூட்டணி அமைத்துக் கொண்டார்கள்.

இப்படியாக மன்னர் என்பவர் - இறைவனின் அவதாரமாக, ஈசுவரனின் மறு உருவமாக சித்தரிக்கப்பட்டான். நம் முஸ்லிம்கள் மத்தியிலும் அரசர்களை (ளில்லே இலாஹி) உலகில் உள்ள இறைவனின் நிழல் என்று அழைக்கும் பழக்கம் இருந்து வந்துள்ளது. அந்த மன்னர்கள் தங்கள் உத்தரவுகளை, கட்டளைகளை, இறைவனின் கட்டளைகள் என்று பிரகடனம் செய்தார்கள்.

(மனிதர்களால் உருவாக்கப்பட்ட இந்த மத்ஹபுகளும்,மதங்களும்) இந்த நம்பிக்கைக்கு தங்களால் முடிந்த அளவிற்கு வலுவூட்டினார்கள். இப்படிப்பட்ட ஆட்சி முறைகளுக்கு முதுகெலும்புகளாக திகழ்ந்தார்கள். இந்த இறைவனின் நிழல்கள், மனித குலத்தின் மிது நடத்திய கொடுமைகளுக்கும் அநியாயங்களுக்கும் அளவே இல்லை. இப்படிப்பட்ட அரசியல் அமைப்பு முறைக்கு ஆங்கிலத்தில் (Theocracy) அமைப்பு முறை என்று அழைப்பார்கள். கிறிஸ்துவ மதமும், இதை வளர்ப்பதில், விசேஷ அக்கறை எடுத்துக் கொண்டது.

-- பாய்ட் கோன்ட் சாம்வேல் -- என்கின்ற ஒரு சிந்தனையாளர், கிறிஸ்துவ மதத்தைப் பற்றி விவாதிக்கும் பொழுது இவ்வாறு எழுதுகின்றார்.

-- கிறிஸ்துவ மதம் மன்னர்களுக்கு வானுலகிலிருந்து தரப்பட்ட உரிமைகள் உண்டு என்கின்ற நம்பிக்கையை ஆதரித்தது. ஐரோப்பிய சரித்திரத்தில் எந்த அளவிற்க்கு பேரழிவுகள் ஏற்பட்டனவோ, அதற்கான முழு பொறுப்பு இந்த நம்பிக்கையேயாகும்.-- (நூல் : Be lief and action , பக்கம் 39)

பலவிதமாக பல சூழ்ச்சிகள் செய்து அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளும் கதைகளைப் பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கின்றோம். இதற்கு மாற்றமாக சில நேரங்களில் யாருக்கு அதிக உடல் பலம் இருந்ததோ, அவர்கள் தங்களுக்கு தேவையான பலத்தை சேகரித்துக் கொண்டனர். பிறகு மற்றவர்களை அடக்கி தாங்கள் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தனர்.

கொஞ்சம் சிந்தித்து பாருங்கள்! அரசாங்கங்களின் இந்தப் போக்கு, ஆரம்ப முதல் இன்று வரை, இப்படித்தான் இருந்துக் கொண்டேயிருக்கின்றது. நடைமுறைகள், செயல்முறைகள், கையாளும் தந்திரங்கள் வேண்டுமானால் மாறி இருக்கலாம். ஆனால் இவற்றிற்குப் பின்னால், ஒளிந்திருக்கும் காரண காரியங்கள் ஒன்றாகவே இருக்கின்றன. தடியெடுத்தவன் தான் தண்டல்காரன் என்ற போக்கு மனித நாகரிகம் அடையாத அறியாமை காலத்தில் எவ்வாறிருந்ததோ, அதே போலத்தான் இன்று வரை நீடித்து வருகின்றது.

சில அறிவு ஜீவிகள், இந்த போக்குகளை எல்லாம் மனதில் நிறுத்தி சிந்தித்துப் பார்த்தார்கள். கூட்டாக வாழும் அமைப்பு முறை எதனால் உருவானது? அதனால் கிடைத்த பலன்கள் என்ன என்பவற்றைப் பற்றி எல்லாம் சீர்தூக்கிப் பார்த்தார்கள்.

அவர்கள், தங்களால் முடிந்த அளவிற்க்கு இந்த அமைப்பு முறையை ஒழுங்குப்படுத்தும் முயற்சிகளை எடுத்துக் கொண்டார்கள்.

ஆள்பவர்களின் உரிமைகள், கடமைகள் என்ன? ஆளப்படுபவர்களின் உரிமைகள் , பொறுப்புகள் என்ன என்பதைப் பற்றி தனி நபர்களும் சமுதாயமும் ஒன்றாக இணைந்து, ஒரு மனதுடன் இதை தீர்மானிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

இரு சாராரும் ஒப்புக்கொள்ளும் இந்த உரிமைகளை , ஒரு ஒப்பந்தத்தின் கீழ் கொண்டு வரவேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். இந்த கண்ணோட்டம் பழைய கிரேக்கர்களின் காலத்திலிருந்து இருந்து வருகின்றது.

ஆனால் 18 ம் நூற்றாண்டில், இதை ஐரோப்பியாவின் (Hobbes Locke , இன்னும் Roussesau) ஆகியோர் இந்தக்

கோட்பாட்டை மிக நல்ல முறையில் பரப்பினார்கள். இப்பொழுது இருக்கின்ற ஜனநாயகம் (Democracy) இதன் அடிப்படையில் உருவாகியதேயாகும்.

அதாவது மக்களின் ஒப்புதலுடன் ஆட்சி. ஆட்சி அதிகாரம் என்ற விஷயத்தில், எழுகின்ற இரண்டாவது கேள்வி இது தான். பிரச்சனைகளை தீர்ப்பதற்கான இறுதி அதிகாரம் யார் கையில் இருக்க வேண்டும்? இதை உச்ச கட்ட அதிகாரம் (Soveriegnty) என்றழைப்பார்கள்.

ஆட்சியும் அதிகாரமும் மன்னர்கள் அல்லது மத குருமார்களின் கைகளில் இருந்த வரை இந்தக் கேள்வி எழவில்லை. (நம்முடைய காலத்தில் உலகத்தின் பல பகுதிகளில் மன்னர்கள் இருக்கும் இடத்தை சர்வாதிகாரிகள் (Dictator) கள் பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களுடைய ஆட்சியிலும் இந்தக் கேள்வி எழுவதில்லை.) மன்னர்களும், மத குருமார்களும் சர்வாதிகதிகாரர்களாகத் தான் இருந்தார்கள். எப்பொழுது ஆட்சியின் போக்கு ஜனநாயகமாக மாறியதோ, அப்பொழுது இந்தக் கேள்வி மிகவும் அவசியம் ஆயிற்று. --*ருஸோ* -- வின் பார்வையில் ஒரு அரசின் உச்ச கட்ட அதிகாரம் என்பது அந்த நாட்டின் அனைத்து மக்களின் பொதுவான சொத்தாகும். -- *லாக்* -- குடைய பார்வையில் இந்த அதிகாரம் பெரும்பான்மை மக்களிடம் இருக்க வேண்டும். -- *நிப்தம்* -- என்பவரும் -- *லாக்கின்* -- கருத்தைத்தான் ஆதரிக்கின்றார். -- *ஜனநாயகம்* -- என்பது இதன் அடிப்படையில் தான் எழுப்பப்பட்டுள்ளது.

-- *மார்க்ஸ்* -- இதிலிருந்து வேறுபடுகின்றார். யாரிடம் உற்பத்திக்கான வாய்ப்புகள் இருக்கின்றனவோ, அவர்களிடம் இந்த உச்ச கட்ட அதிகாரம் இருக்கும் என்கின்றார், *மார்க்ஸ்* ! அதாவது தொழிலாளித்துவ அமைப்பு முறையில், தொழிலாளர்களிடம் இருக்கும் என்கின்றார்.

நம்முடைய காலத்தில் ஜனாநயகத்திற்கு மிகவும் முக்கியத்துவம் உள்ளது. பெரும்பான்மையான, நாகரிகமான, சமுதாயங்கள் இதைத்தான் ஆதரிக்கின்றன. இந்தக் கோட்பாட்டில் கீழ்கண்ட சிற்ப்பம்சங்கள் காணப்படுகின்றன.

ஜனநாயக அமைப்பு முறை

1) இந்த அமைப்பு முறையில், ஆளுவோர், ஆளப்படுவோர் என்கின்ற வித்தியாசம் இருப்பதில்லை. இந்த ஆட்சியானது -- மக்களால் மக்களின் நலனுக்காக, மக்களிடமிருந்து அதாவது (Government of the people by the people for the people).

2) மக்களின் விருப்பத்தை அவர்களுடைய பிரதிநிதிகள் பிரதிபலிக்கின்றார்கள்.

3) ஒரு விஷயம் சரியா, அல்லது தவறா என்ற தீர்மானம் பெரும்பான்மையானவர்களின் விருப்பத்தை முன் வைத்து தீர்மானிக்கப்படுகின்றது.

4) சிறுபான்மையினரின் தீர்மானங்கள் சரியென்று எற்றுக்கொள்ளப்படுவதில்லை. மனிதன் நீண்ட காலம் பரிசீலனை செய்த பிறகு இந்த அமைப்பு முறையை கண்டுபிடித்திருக்கின்றான்.

இதைவிட ஒரு சிறந்த அமைப்பு முறையை கற்பனைகூட செய்ய முடியாது என்று ஐரோப்பிய சிந்தனையாளர்கள் கருதுகின்றார்கள். இது மனித குலத்திற்க்கு கிடைத்த மாபெரும் அருட்கொடை என்றும், மானிட குலத்தின் நன்மைக்கான உத்திரவாதம் என்றும் இதை ஆதரிப்பவர்கள் தான் உண்மையாளர்கள், சத்தியவான்கள், மனித நேயர்கள் என்றும், இதை எதிர்ப்பவர்கள் மனித குல எதிரிகள். விரோதிகள் என்றும் நம்பப்படுகின்றது.

இப்பொழுது இருக்கின்ற கேள்வி, உண்மையில் இதற்கு இந்த குணாம்சங்கள் இருக்கின்றனவா? என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்த ஐரோப்பிய அறிஞர்கள் என்ன முடிவுக்கு வந்திருக்கின்றார்கள்? அதாவது எங்கெல்லாம் ஜனநாயகம் அரசியல் முறை கோலோச்சுகின்றதோ, அங்குள்ள அறிஞர்கள்!

சில வருடங்களுக்கு முன்னால், லண்டன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் -- Alfred Cobbal ஒரு சிறந்த புத்தகம் ஒன்று எழுதியுள்ளார். The crisis of civilization என்பது அந்த புத்தகத்தின் பெயர். இந்த நூலிலே ஐரோப்பிய கலாச்சாரத்தின்

வீழ்ச்சிக்கான காரணங்களை விவாதிக்கும் பொழுது, இதற்கு முக்கிய காரணம் ஜனநாயக அமைப்பு முறை தான் என்று அவர் சொல்கின்றார்.

ஜனநாயக ஆட்சி முறையில் ஆளுவோருக்கும், ஆளப்படுவோருக்கும் மத்தியிலே செயலளவிலே பார்த்தோமேயானால், ஆட்சியாளரும், ஆளப்படுபவர்களும் ஒன்று என்று நினைப்பது முடியாத காரியமாகும். அரசாங்கம் என்பது, ஒரு தனிப்பிரிவுள்ள நபர்களுக்கு பெயராகும். பிரஜைகள் அல்லது பொதுமக்கள் என்பது இரண்டாம் பட்ச நபர்களுக்கு பெயராகும். சமுதாயம் என்பது, ஆரம்ப காலத்திலிருந்தே குடும்பம், கோத்திரம் என்கின்ற வாழ்க்கை முறையிலிருந்து விலகி கொஞ்சம் முன்னால் வந்த பிறகு, ஆள்பவரும், ஆளப்படுபவரும் ஒரு காலத்திலும் ஒன்றாக முடியாது. இந்த இரு சாராரும் ஒன்று தான் என்று நினைப்போமேயனால், நட்டிலே மிகவும் கொடூரமான, சுதந்திரமான அதிகாரங்களை அது உருவாக்கிவிடும்.-- (பக்கம்: 68)

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் – A.C.Wing 1947 ம் ஆண்டில் The Indivual State and World Government என்ற நூலை எழுதி வெளியிட்டார். இதில் ஜனநாகத்தை பற்றி மிக விரிவான முறையில் விவாதிக்கப்படுகின்றது.

அவர் எழுதுகின்றார். --ஜனநாயக தந்தை என்று அழைக்கப்படும் --ரூஸோ -- என்ன கருதினார் என்றால், ஜனநாயக அமைப்பு முறையிலே யாருடைய உரிமையும் பறிக்கப்படாது. யார் மீதும் எந்த அநியாமும் நடக்காது. ஏனெனில் மக்கள் தாங்களை தாங்களே, கொடுமைப் படுத்திக் கொள்ள மாட்டார்கள் என்று அவர் நினைத்தார்.ஆனால் ரூஸோ எங்களுடைய காலத்திலே வாழ்ந்திருந்தால், இப்பொழுது இருக்கின்ற ஜனநாயக அமைப்பு முறையை அனுபவித்திருந்தால், அவர் இப்படிப்பட்ட நூலை எழுதியிருக்க மாட்டார். ஜனநாயக அமைப்பு முறையைப் பற்றி அவர் இப்படிப்பட்ட ஏமாற்றத்திலே இருந்திருக்க மாட்டார். --என்று அவர் எழுதியிருக்கின்றார். (பக்கம் : 114)

பிரான்ஸ் நாட்டின் சிந்தனையாளர் Ren Guenn என்பவர் இதைப்பற்றி இவ்வாறு எழுதுகின்றார்.

-- <u>ஜனநாயகம் என்ற சொல்லுக்கு, மக்கள் தங்களுடைய</u>

ஆட்சியை தாங்களே நிறுவிக்கொள்கின்றார்கள் என்பது அர்த்தமென்றால், இது முடியாத ஒரு விஷயமாகும். இது இதற்கு முன்பும் நடந்ததில்லை. இன்றைக்கும் அது சாத்தியம் இல்லை. இப்படி சொல்வது முடியாத, ஆகாத, இரண்டு விஷயங்களை ஒன்றிணைப்பதற்கு பெயராகும். ஆளுவோர் இல்லையென்றால், ஆளப்படுபவர் யாரும் இல்லை. இன்றைக்கு யார் - எப்படியாவது ஆட்சியையும், அதிகாரத்தையும் பிடித்துக் கொள்கின்றார்களோ, அவர்களுடைய மிகப் பெரிய திறமை, ஆற்றல், எதுவென்றால், உங்கள் மீது அதிகாரம் செலுத்துபவர்கள், யாரும் இல்லையென்று மக்களை நம்ப வைத்துவிடுகின்றார்கள். மக்கள் குரலே மகேசன் குரல், இந்த நாட்டில் எல்லோரும் மன்னர்கள். நீங்கள் உங்களுக்கே ஆட்சியாளர்கள், என்ற சுலோகங்கள் என்ன தான் எடுத்துக் காட்டுகின்றன? பொது வாக்கெடுப்பு (Universal Suffrage) என்ற கோட்பாடு இந்த சூழ்ச்சியின் ஏமாற்று வேலையின் மறு உருவே ஆகும். இந்தக் கோட்பாட்டின் அடிப்படையிலே சட்டம் என்பது பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்படுகின்றது என்று நம்புகின்றார்கள். ஆனால் ஒரு உண்மையை மறந்து விடுகின்றார்கள். இந்த விருப்பம் என்பது எப்படிப்பட்ட பொருள் என்றால், இதை மிகவும் எளிதாக எந்த பக்கம் வேண்டுமானாலும் திருப்பிக் கொள்ளலாம். மாற்றிக் கொள்ளலாம். -- (The crisis of the modern world பக்கம்: 106)

கொஞ்சம் முன்னே செல்வதற்கு முன் இந்த உண்மையை மீண்டும் ஒரு முறை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். இந்த சிந்தனையாளர்கள், இந்த ஜனநாயக அமைப்பு முறையை ஏன் இவ்வளவு கடுமையாக விமர்சிக்கின்றார்கள்?

ஜனநாயகத்திலே, உச்சகட்ட அதிகாரம் என்பது அதாவது சட்டத்தை உருவாக்கும் எல்லையற்ற உரிமை, பொது மக்களின் கையில் இருக்கின்றது. இன்னும் பொது மக்களின் இந்த உரிமை அவர்களுடைய பிரதிநிதிகளின் பெரும்பான்மை பலத்தைக் கொண்டு செயலாக்கம் பெறுகின்றது. சுருங்கச் சொன்னால், இந்த கோட்பாட்டின் அடிப்படையிலே எப்படி நம்பப்படுகின்றது என்றால், நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பெரும்பான்மையான பிரதிநிதிகள் எந்த சட்டத்தை உருவாக்குகின்றார்களோ, அது நாட்டின் அனைத்து மக்களின் ஒட்டு மொத்த கருத்து, தீர்மானமாக இருக்கும் என்று கருதப்படுகின்றது. ஆகவே இது எல்லாவகையிலும்

நியாயமானது, சத்தியமானது என்று கருதுகின்றார்கள். இந்த நம்பிக்கை தான், இந்த அமைப்பு முறையின் அடிப்படையான பலவீனம், கோளாறு ஆகும். இது தான் இதன் அழிவிற்கான காரணம் என்று அந்த சிந்தனையாளர்கள் கருதுகின்றார்கள்.

இதைப்பற்றி பேராசிரியர் H.I. Mencken தன்னுடைய நூலான (Treatise on right and wrong) என்ற நூலிலே எழுதுகின்றார். – மனிதன் கண்ட தோல்விகளில் இது தான் மிகப்பெரிய தோல்வியாக இருக்கின்றது. அவன் விலங்கின குணங்களை கொண்டிருந்தாலும், எல்லா விலங்கினங்களிலும் அவன் தான் மிகப்பெரிய அறிவாளியாக இருக்கின்றான். அவனுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய தோல்வி எதுவென்றால், நல்லதொரு ஆட்சி முறை என்ற அளவிலே ஒரு அமைப்பு முறையை அவனால் இது வரை உருவாக்க முடியவில்லை. இந்த விஷயத்திலே அவன் அரும்பெறும் முயற்சிகளை எல்லாம் செய்து பார்த்தான். சில முயற்சிகள் முட்டாள்தனமாக இருந்தன. சில முயற்சிகள் மிகவும் துணிச்சலான முயற்சிகளாக இருந்தன. ஆனால் இவற்றை செயலாக்கத்திற்க்கு கொண்டு வரும் பொழுது ஏமாற்றத்தை தவிர, தோல்வியை தவிர, வேறு எதுவும் அவனுக்கு கிடைக்கவில்லை.

இதற்கு காரணம் என்னவென்றால், ஆட்சிக்கான ஒரு செயல்முறையை, ஒரு வரைபடத்தை, வரைந்துக் காட்டுவது என்பது வேறு விஷயம், அதை செயலளவிலே செயல்படுத்திக் காட்டுவது என்பது வேறு விஷயமாகும். ஆட்சி என்பது நாட்டு மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கான ஒரு உபாயம் ஆகும். ஆனால் செயலளவிலே ஆட்சியாளர்களைப் பார்த்தால், அவர்கள் மக்களுக்காக பணியாற்றுவது தங்களுடைய கடமையாக கருதுவதில்லை. இப்படிப்பட்ட ஆட்சி முறைகளிலே மிகவும் மோசமான ஆட்சிமுறை ஜனநாயக ஆட்சி முறையாகும். இந்த ஆட்சியாளர்களுக்கு மிக நன்றாக தெரியும். ஒரு அரசாங்கத்தின் அடிப்படை, சரியான, உறுதியான கொள்கைளின் மீது தான் கட்டப்படவேண்டும் என்று ! ஆனால் இவர்களுடைய செயலாக்கம் இதன் அடிப்படையில் அமைவதில்லை.

இவர்களுடைய பணி எல்லாம், எந்த ஒரு சக்தி இவர்கள் மீது வெளியிலிருந்து, அழுத்தத்தை தருகின்றதோ, அதற்கு துணை புரியவேண்டும் என்பது தான் இவர்களுடைய செயல்பாட்டாக

இருக்கின்றது. யார் பொதுமக்களுக்கு எதிரிகளாக இருக்கின்றார்களோ, அவர்களுடைய துணையுடன் இது போன்ற அடக்கு முறையின் மூலமாக காலவரையற்ற அளவிற்கு தாங்கள் ஆட்சியல் அமர்ந்திருக்க வேண்டும் என்பது தான் இவர்களுடைய நோக்கமாக இருக்கின்றது.

1947-ம் ஆண்டின் ஐ.நா சபையின் Unesco அமைப்பு ஒரு விசாரணை கமிஷனை அமைக்கின்றது. ஜனநாயக முறையிலே நடைபெறும் ஆட்சிகளை விஞ்ஞான பூர்வமாக ஆராயவேண்டும் என்று இதற்கு கட்டளையிடப்படுகின்றது. இந்த கமிட்டி உலகிலுள்ள பல்வேறு அறிஞர் பெருமக்களிடமும் சிந்தனையாளர்களுடனும் இதைப் பற்றி இவர்களுடைய கருத்துக்களை கேட்டறிந்தது.

அவற்றைத் தொகுத்து ஒரு நூல் வடிவிலே வெளியிட்டு இருக்கின்றார்கள். Democracy in a world of tension என்பது இந்த நூலின் பெயராகும். அவர்கள் கேட்ட முதல் கேள்வி ஜனநாயகத்திற்கு சரியான அர்த்தமென்ன? பெரும்பாலான அறிஞர்கள் இதற்கு கொடுத்த பதில், -- இது மிகவும் குழப்பமான சொல்லாகும். -- இதற்கு சரியான அர்த்தம் இதுவரை நிர்ணயிக்கப்படவில்லை, என்றார்கள். இன்னும் சிலர் நம்முடைய நவீன காலத்திலே ஜனநாயகம் என்ற சொல்லைப் போல புரிந்துக் கொள்ள முடியாத சொல் வேறொன்றும் இல்லலை என்று கூறினார்கள். -- பக்கம் : 460

இதற்குப் பிறகு இதன் அறிக்கையிலே இந்த கேள்வி தான் முன்வைக்கப்படுகின்றது. பெரும்பான்மையான மக்கள் எடுக்கின்ற முடிவு எப்பொழுதும் சரியாக இருக்குமா? இதை எதிர்த்து விமர்சனம் செய்வது ஜனநாயகத்திற்க்கு விரோதமானதா? இந்த கேள்விக்கு கிடைத்த பதில்.

பெரும்பான்மையான முடிவு, தவறுகளிலிருந்தும் குறைகளிலிருந்தும் தூய்மையாக இருக்கும் என்று நினைப்பது தவறாகும். அது தறுவாகக் கூட இருக்கலாம். ஆகவே பெரும்பான்மையானவருக்கு எதிராக போராடுவதற்க்கு அவர்களுடைய முடிவை மாற்றுதவதற்கு சிறுபான்மையினருக்கு உரிமை இருக்கின்றது-- என்று பதில் தரப்பட்டது. பக்கம் : 504

நாம் மேலே ஜனநாயகத்திற்க்கு எதிராக எதையெல்லாம் எழுதினோமோ, இதற்கு அர்த்தம் எத்தனை அமைப்பு முறைகள் இருக்கின்றனவோ, அதில் ஜனநாயக அமைப்பு முறை தான் மிகவும் மோசமானது என்று சொல்வது நம்முடைய நோக்கமல்ல.

நாம் சொல்ல விரும்புவது, மனிதனுடைய வரலாற்றில் அவனுடைய அறிவு தேர்ந்தெடுத்த, அமைப்பு முறையைப் பற்றிய ஆய்வுகள், பிறகு மாபெரும் தோல்வியிலே தான் முடிந்து உள்ளன என்பதை எடுத்துக் காட்டுகின்றன.
உலகில் உள்ள மற்ற அமைப்பு முறைகளைப் போல் இந்த அமைப்பிற்கும் உள்ள அடிப்படை தவறு எதுவென்றால், இதில் சத்தியம், அசத்தியம், சரி எது தவறு எது என்பது நிர்ணயம் ஆவதில்லை. இந்த அமைப்பிடம் நிரந்தரமான Objective இன்னும் சரியான Obsolute அளவுகோல்கள் இல்லை . இதில் பெரும்பான்மையானவர்கள் எதை விரும்புகின்றார்களோ, அது சட்டமாகிவிடுகின்றது. அதை பின்பற்றுவது எல்லோருக்கும் கடமையாகிவிடுகின்றது.

எது சரி எது தவறு என்பதை தீர்மானிக்க வெளியிலிருந்து ஒரு நிரந்தர அளவுகோல் இல்லாமல் போனால், நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்கள் எதை தீர்மானிக்கின்றார்களோ, அது தான் நாட்டின் சட்டமாகிவிடும் என்றால், இதனால் ஏற்படும் நஷ்டம் என்ன? இது தான் இப்பொழுது நம் முன் இருக்கின்ற கேள்வி.

இந்தக் கேள்வி உண்மையிலே நம்மை சிந்திக்கத் தூண்டுகின்றது. இது ஏன் என்றால், Secular மதசார்பற்ற அரசியல் முறைக்கும், திருக்குர்ஆனின் அரசியல் அமைப்பு முறைக்கும் உள்ள அடிப்படை வித்தியாசம் (Point of Departure)
இங்கிருந்து தான் ஆரம்பமாகின்றது.

முதலில் இந்த உண்மையை மனதில் வையுங்கள். சமுதாயத்தில் உள்ள பொது மக்களாக இருக்கட்டும் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளாக இருக்கட்டும். அந்தப் பிரதிநிதிகளில் பெரும்பான்மையானவர்களாக இருக்கட்டும், அல்லது சிறுபான்மையானர்களாக இருக்கட்டும்.

இவர்கள் அனைவரும் பொதுவாக இறுதியில் மனிதர்களே . அதே குறைபாடு மனிதர்களின் குழுகளிடமும் இருக்கும். மக்களின் பெரும்பான்மையின் முடிவு, மனித ஆசாபாசங்கள் அவர்களுடைய பிராந்திய சொந்த உணர்வுகளுக்கு அப்பாற்பட்டிருக்கும். எல்லா மனிதர்களின் பொது நன்மையை அது தன்னுடைய கருத்தில் கொண்டிருக்கும் என்று சொல்ல முடியாது.

யாராவது அவ்வாறு நம்புவார்களேயானால், அவர் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கின்றார் என்றே அர்த்தமாகும். Lard Senel என்ற அறிஞரின் வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால் -- அரசாங்கங்கள் மனிதர்களைக் கொண்டதாக இருக்கும். மனிதர்களிடம் பொதுவாக காணப்படும் குறைபாடுகள் இந்த மனிதர்களிடமும் இருக்கும். ஆகவே இதன் விளைவு என்னவென்றால், எந்த மனிதர்கள் சட்டத்தை இயற்றுகின்றார்களோ, அல்லது நாட்டின் கொள்கைளை நிர்ணயிக்கின்றார்களோ, அவர்கள் மற்றவர்களைவிட நிச்சயமாக அதிகம் கண்ணியம் வாய்ந்தவரக்ளாகவும், இருக்க முடியாது.
(The new world பக்கம் - 41)

Aldous Huxely என்பவர் இதைப் பற்றி எழுதும் பொழுது கூறுகின்றார்.

-- எந்த நபர்களிடம் ஆட்சியும் அதிகாரமும் கையில் வந்ததோ, அவர்களிடம் அத்து மீறல் உருவாகவில்லை என்று வரலாற்றில் ஒரு நிகழ்ச்சியும் நீங்கள் காட்ட முடியாது. இதற்கு முன்னால் என்ன நடந்ததோ, இன்றைக்கும் அல்லது நாளைக்கோ, அது நடக்காது என்று உங்களால் ஒருக்காலமும் உறுதிப்பட சொல்ல முடியாது. ஆதாரம்: (Science liberty and peace பக்கம் : 41)

பெரும்பான்மையையும் கட்டுபாடில்லாமல் ஒரு வரையறை இல்லாமல் விட்டு விட்டால், அவர்களுடைய கரங்களில் மற்ற மனிதர்களின் உரிமைகள் பாதுகாப்பாக இருக்காது. இது உள் நாட்டு நிலைமையாகும். மற்ற நாடுகளில் உள்ள மனிதர்களை பொறுத்தவரையில் அவர்கள் மனிதர்களாகவே கருதப்பட மாட்டார்கள்.

உலகில், மக்கள் இன்றைக்கு பல தேசிய இனங்களாக (Na-

tions) பிரிந்திருக்கின்றார்கள். தேசிய வாதம் (Nationalism) என்பது ஒரு அரசியல் நம்பிக்கை என்ற அளவில் கடந்த நூற்றாண்டில் தான் வலுவடைந்திருக்கின்றது. நம்முடைய காலத்தில் இதற்கு பலமும் செல்வாக்கும் கூடியிருக்கின்றது.

மேற்கில் உள்ளவர்கள் இதைப் பற்றி பெரிதும் பெருமைப் படுகின்றார்கள். ஆனால் இந்த தேசியவாதத்தை அனுபவித்த பிறகு ஐரோப்பிய அறிஞர்கள் என்ன முடிவுக்கு வந்திருக்கின்றாரகள் என்பதை அனைவரும் நன்கறிவர். பேராசிரியர் கோபின் இதைப்பற்றி குறிப்பிடும் பொழுது சொல்கின்றார். -- தேசிய வாதம், அல்லது தேசபக்தி என்ற உணர்வு ,வெறுப்பு, பொறாமை, ஆகியவற்றின் அடிப்படையில் உருவெடுக்கின்றது. ஒரு சமுதாயம் தன்னை எப்பொழுது நினைத்து பார்க்கின்றது என்றால், எப்பொழுது அது மற்ற சமுதாயத்துடன் மோதுகின்றதோ, அப்பொழுது தான் அது நினைத்து பார்க்கின்றது.

ஒரு சமுதாயத்தின் போட்டி மனப்பான்மையும், பொறாமை குணமும், தன்னுடைய சமுதாயம் மேம்பட்ட நிலை அடைவதுடன் முடிவடைந்து விடுவதில்லை. எப்பொழது ஒரு சமுதாயம் தன்னாட்சியும, அதிகாரமும் பெற்று தன்னை நிலைப்படுத்திக் கொள்கின்றதோ, அது மற்ற சமுதாயங்களை, யார், சுயாட்சிகள் கேட்கின்றார்களோ, அவர்களை அடக்கவும் அழுத்தவும் ஆரம்பித்து விடுகின்றது. (The crisis of civilisation) --

சமுதாயங்களின் நிலைகளைப் பற்றி நிபுணராக விளங்குகின்ற Fedrick hertz எழுதுகின்றார். பல்வேறு சமுதாயங்கள் தங்களுக்குள் ஏன் சண்டையிட்டுக் கொண்டார்கள். வரலாறு எங்களுக்கு சொல்லிக் காட்டுகின்றது. இந்த சமுதாயங்கள், மனிதர்களின் பல்வேறு குழுக்களாக இருந்தனர். அவர்கள் தங்களுக்கு தனி தனி பெயர் வைத்துக் கொண்டிருந்தனர். உதாரணத்திற்க்கு சொல்ல வேண்டும் என்றால், ஒரு ஆங்கிலேயன் மனதில் ஒரு பிரான்ஸ் அல்லது இத்தாலி நாட்டின் சமுதாயத்திற்க்கு எதிராக, வெறுப்பும் விரக்தியும் ஏற்பட்டுவிடுகின்றது. (பக்கம் 328)

-- *பார்டர் நேடர்ஸல்* -- தன்னுடைய நூல் The hopes for a changing world -- ல் எழுதுகின்றார்.

-- நம்முடைய காலத்தில் பல்வேறு சமுதாயங்கள் மத்தியில், சமூக உறவுகளை வளர்ப்பதற்காக எது தடையாக இருக்கின்றது என்றால், அது தேசிய வாதமேயாகும். ஏனெனில் தேசியவாதம் என்பது மனித குலத்தின் அழிவிற்கான மிகப்பெரிய சக்தியாகும். இதில் வேடிக்கை என்னவென்றால், மற்ற நாடுகளின் தேசிய வாதம் என்பது மனித குலத்தின் அழிவிற்கான தேசியவாதம், அது தவறானது என்று ஒவ்வொருவரும் கருதுகின்றார்கள். ஆனால் தன்னுடைய நாட்டின் தேசிய வாதம் என்பது ஒரு அரசியல் கொள்கை என்ற அளவில் நிற்காமல், அது ஒரு நம்பிக்கை என்ற ரூபத்தை ஏற்றுள்ளது. -- ஆல்டோஸ் ஹக்ஸலே -- யின் வார்த்தைகளில் சொல்ல வேண்டும் என்றால்,

-- Nationalism என்பது ஒரு சிலைகளை வணங்கக் கூடிய, இணை வைக்கக் கூடிய மத்ஹபாக மாறியுள்ளது. இது எப்படிப்பட்ட மத்ஹப் (மதம்) என்றால், கலவரம், கலகம், மனிதர்கள்மத்தியில் பிரிவினையை உண்டு பண்ணுவதில் எந்த அளவிற்கு இது சக்தி வாய்ந்ததாக திகழ்கின்றது என்றால், மனித குலத்தின் ஒற்றுமை மீது ஆர்வமுள்ள எந்த மதமும் இதனுடன் போட்டி போடமுடியாது. தேசியவாதம் அல்லது இன உணர்வு போன்றவைகள் பைத்தியம் பிடித்தவர்களின் வழிமுறைகள் என்று சொல்வார்கள்.-- (Perennial philosophy) பக்கம் 203

தேசிய வாதம் ஒரு மதம் ஆகிவிட்டதின் விளைவு, தேச பக்தி (Patriotism) என்பது மிக உயர்ந்த பண்பாடு என்றும் போற்றப்படுகின்றது. இந்த மதத்தின் -- கலிமா -- (தாரக மந்திரம்) எதுவென்றால், (My country is right or wrong) -- என் நாடு சத்தியத்தின் மீது இருந்தாலும், அசத்தியத்தின் மீது இருந்தாலும், நான் என் நாட்டிற்க்கு தான் உறுதுணையாக இருப்பேன். -- இது தான் அதன் நம்பிக்கையாகும். Romlin சொற்றகில் சொல்ல வேண்டும் என்றால்,

-- ஒரு நாட்டின் அடிப்படைக் கடமை தன்னுடைய நலத்தை பாதுகாப்பதும், தன்னுடைய பலத்தை பெருக்குவதுமேயாகும். எதுவரை தன்னுடைய நாட்டின் நலத்துடன் மற்ற நாட்டின் நலன் மோதவில்லையோ, அது வரை அந்த நாட்டின் நலன் மீது அக்கறைக் கொள்ளலாம். அனைத்து ஒழுக்க மாண்புகளையும் விட நாட்டு நலனே பெரிது. இதற்கு எந்த விதமான தியாகமும் ஆகுமானதே . (Quoted by

Murray in The individual and the State -- பக்கம் 126)

-- *லார்ட் கிரே* -- என்று அறிஞன் கூறினான். -- அரசாங்கங்களின் விஷயங்கள் ஒழுக்க மாண்புகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதில்லை. (அதே நூல் பக்கம் : 13) *பேராசியர் ஜோட்டின்* சொற்களில் சொல்ல வேண்டும் என்றால், -- இப்பொழுது உலகத்தில் தனியாரின் வாழ்வில் ஒழுக்க மாண்புகள் வேறு, நாட்டின் அரசாங்க விஷயங்களின் கோட்பாடுகள் வேறாக இருக்கின்றன.

இதன் விளைவு யாதெனில், யார் தங்களுடைய தனிப்பட்ட வாழ்வில் நம்பிக்கையாளர்களாக, நாணயஸ்தர்களாக இருக்கின்றார்களோ, கருணையுள்ளவர்களாக இருக்கின்றார்களோ, அவர்களும் தங்கள் நாட்டின் பிரதிநிதிகளாக இன்னொரு நாட்டின் பிரதிநிதியுடன் ஒப்பந்தம் செய்ய வரும்பொழுது, அங்கே எதுவெல்லாம் தனிப்பட்ட வாழ்வில் செய்வது பாவமாக, வெட்கப்பட வேண்டிய விஷயமாக இருக்கின்றதோ, அவையெல்லாம் தன் நாட்டிற்காக செய்வது அவர் புண்ணியமாக கருதுகின்றனர். (Guide to the philosophy of morals and politics , பக்கம்: 730)

இந்த உண்மையை இத்தாலியின் நிபுணர் (Covour) என்பவர் தன்னுடைய மொழியில் இவ்வாறு கூறுகின்றார். -- நாம் நம்முடைய நாட்டிற்காக எதை யெல்லாம் செய்கின்றோமோ, அதை நாம் சுயத்திற்காக செய்தால், நாம் எவ்வளவு பெரிய ஷைத்தான்களாக அழைக்கப்படுவோம் என்பது எனக்கே தெரியாது. (Foreign affairs . year 1952)

1) நாம் இதுவரை பேசிவந்த விஷயங்களை மீண்டும் ஒரு முறை சுருக்கமாக பார்த்துக் கொள்வோம். மனிதர்கள் ஒன்றிணைந்து கூட்டாக வாழ வேண்டும்.

2) கூட்டாக சேர்ந்து வாழும் பொழுது அவர்களுடைய நலன்களுக்கு மத்தியில் மோதல்கள் வரக்கூடாது.

3) மோதல்கள் வந்தால், சண்டைகள் வரக்கூடாது. அதற்காக அரசியல் அமைப்பின் கண்ணோட்டம் வர வேண்டும்.

4) மனித மூளைகள் இதுவரை எத்தனை அரசியல்

அமைப்புகளை உருவாக்கியுள்ளனவோ, அவற்றில் ஒன்று கூட இந்த குறிக்கோளில் வெற்றி அடையவில்லை.

5) இந்த அமைப்பு முறைகளிலே இறுதியாக வந்த அமைப்பு முறை தான் தேசிய ஜனநாயகமாகும். ஆனால் இந்த அமைப்பு முறையும் மோசமான தோல்வியை தழுவிக் கொண்டிருக்கின்றது. இது ஏனென்றால், முதலில் தன்னுடைய சொந்த நாட்டிலேயே பல்வேறு கட்சிகள் மத்தியிலே மோதல்கள் இருந்துக் கொண்டே இருக்கின்றன.

இரண்டாவதாக பல்வேறு நாடுகள் மத்தியிலே இன்னும் சமுதாயங்கள் மத்தியிலே நிலவி வருகின்ற வெறுப்பும், காழ்ப்பும் இந்த உலகை நரகமாக்கிக் கொண்டிருக்கின்றது. இப்பொழுது இருக்கின்ற கேள்வி, மனிதனின் மூளை இந்த பிரச்சனைகளுக்கானத் தீர்வை கண்டிருக்கின்றதா? அப்படி கண்டிருந்தால், அவைகள் என்ன? இதை செயல்படுத்துவதற்க்கு எது தடையாக இருக்கின்றது?

நாங்கள் பார்த்தோம். ஜனநாயகத்தில் இருக்கின்ற அடிப்படைக் கோளாறு எதுவென்றால், இதில் உச்ச கட்ட அதிகாரம் மக்கள் கையில் உள்ளது என்று நம்பப்படுகின்றது. மக்கள் பிரதிநிகளின் பெரும்பான்மையான தீர்ப்பு தான் கடைசித் தீர்ப்பு என்று நம்பப்படுகின்றது.

இதைப் பற்றி விவாதிக்கையில் பேராசிரியர் *கோபின்* எழுதுகின்றார்.

-- அதிகாரம் என்பது, மக்கள் கையில் இருக்க வேண்டும் என்ற கோட்பாடிற்கு ஆதரவாக சிலர் இந்தக் கோட்பாட்டை முன் வைக்கின்றார்கள். அரசாங்கங்கள் என்பது ஒன்று பலத்தின் அடிப்படையில் உருவாகும், அல்லது தங்களுக்கிடையே விரும்பி ஒப்பந்தம் செய்துக்கொள்வதனால் உருவாகும்.

எந்த விஷயத்தை பெரும்பான்மை பலம் என்பது - சரி என்று சொல்லுமோ, அது சரி என்று ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆவே அரசாங்கம் என்பது, மக்களுடைய விருப்பத்தை முன் வைத்து மக்களால் உருவாக்கப்பட வேண்டும். இதுவே சரியாகும் என்று அவர்கள் வாதிடுகின்றார்கள். ஆனால் இந்த வாதம் தத்துவ ரீதியாகவும் சரியில்லை. சத்தியம் என்ற அடிப்படையிலும் சரியில்லை.

ஒரு விஷயத்தை ஒரு இலட்சம் பேர் சேர்ந்து சரியென்று சொன்னாலும் அது சரியாகிவிடாது. -- ரூசோ --கூறுகின்றான். மக்களின் அபிப்பிராயம் (General Will) எப்பொழுதும் சரியாகவே இருக்கும், இல்லாவிட்டால் இதை மக்கள் தீர்ப்பு என்று அழைக்க முடியாது என்கின்றார்.

அப்படி என்றால், பெரும்பான்மை, சிறுபான்மை என்ற கேள்வி ஏன் எழுகின்றது? மக்கள் தீர்ப்பு எப்பொழுது சரியாக செல்லுமோ, அப்பொழுது தான் அது மக்கள் தீர்ப்பாக கொள்ளப்பட வேண்டும். எது ஒழுக்க மாண்புகளின் அடிப்படையிலே சரியாக இருக்கின்றதோ, அது தான் சத்தியமாகும் என்று நாம் ஏன் சொல்லக்கூடாது. அதற்கு ஆதரவாக ஒருவர் கூட கை தூக்கவில்லை என்றாலும் சரியே!

--*பேராசிரியர் கோபின்* -- சொல்ல வருவது என்னவென்றால், ஒரு விஷயம் சரியா அல்லது தவறா? என்பதற்கான அளவுகோல் ஒழுக்க மாண்புகளாகத் தான் இருக்க முடியுமே தவிர பெரும்பான்மையோரின் தீர்மானங்களாக இருக்க முடியாது. -- *லாக்* -- என்ற சிந்தனையாளர் ஜனநாயக கோட்பாட்டை முன் வைத்த பொழுது அவருடைய பார்வையிலும் ஒரு நிரந்தர சட்டம் என்ற கண்ணோட்டம் இருந்தது. அதை அவர் இயற்கை சட்டம் என்று அழைத்தார். ஆகவே இந்த விஷயத்தில் அவர் கூறுகின்றார்.

-- <u>மனதில் வருவதையெல்லாம் செய்து முடிக்க எந்த அரசாங்கத்திற்கும் உரிமை இல்லை. இயற்கை சட்டமென்பது ஒரு இயற்கை சட்டமாகும். அது எல்லா மனிதர்களையும் சரிசமமாக ஆட்கொள்கின்றது. அவர்கள் சட்டத்தை உருவாக்குபவர்களாக இருந்தாலும் சரி, சட்டத்தை பின்பற்றுபவர்களாக இருந்தாலும் சரி.</u> (Cf Mabboth . The state and the citizen பக்கம்: 25)

இயற்கை சட்டம்

இயற்கை சட்டம் என்பது இறைவனால் உருவாக்கப்பட்டவை என்று -- *லாக்* -- கருதுகின்றார். மனித குலம் நாகரீகமடையாத அந்த காலத்திலும் அவர்கள் இதற்கு

அடிபணிந்தவர்களாக இருந்தார்கள். அப்பொழுது அவர்கள் Nature - ன் அடிப்படையிலே வாழ்ந்து வந்தார்கள். அப்பொழுது அந்த மக்கள் தங்கள் அறிவை தான் (REASON) பயன்படுத்தினார்கள். உணர்வுகளை பயன்படுத்தவில்லை. அதற்குப் பிறகு வந்த மக்கள் தங்கள் உணர்ச்சிகளுக்குப் பின்னால் செல்ல ஆரம்பித்தார்கள். இதனால் அவர்களின் வாழ்க்கை இயற்கையின் அடிப்படையிலே அமையவில்லை. இப்பொழுது மீண்டும் அதே இயற்கை சட்டத்தை மீண்டும் தங்கள் வாழ்வில் கொண்டு வருவது தான் மனித சமுதாயத்தின் கடமையாகும் என்று -- *லாக்* -- கூறுகின்றார். இவ்வாறு எல்லாம் சொல்லிவிட்டு இந்த சட்டமானது பெரும்பான்மையான மக்களின் தீர்ப்பின் அடிப்படையில் தான் பெற முடியும் என்றும் அவர் கூறுகின்றார்.

பார்த்தீர்களாக சகோதரர்களே ! எவ்வளவு பெரிய சிந்தனையாளர் சூறாவளி சுழலில் சிக்கிவிட்ட மரக்கட்டையை போல ஒரே புள்ளியை சுற்றி எந்த ஒரு பலனும் இல்லாமல் எப்படி வலம் வருகின்றதோ, அது போல, இவருடைய சிந்தனைகள், தீர்மானங்களிலே அதன் பின்னணியிலே மறைந்திருக்கின்ற தவறுகள், குளறுபடிகள், சுயநலன்கள், அநியாயங்களைக் கண்டு தாங்க முடியாமல் அலறுகின்றார்.

தன் மனதில் வருவதையெல்லாம், செய்து கொள்வதற்கு எந்த அரசாங்கத்திற்கும் அனுமதியில்லை. ஒவ்வொரு அரசாங்கமும் நிரந்தர சட்டங்களுக்கு அடிபணிந்தே ஆக வேண்டும் என்று கூறுகின்றனர். இயற்கையின் இந்த நிரந்தர சட்டம் எங்கிருந்து கிடைக்கும் என்று அவரிடம் கேட்கப்பட்டால், அவருக்கு இதைதவிர வேறு எதுவும் புலப்படவில்லை.

இந்த சட்டம் பெரும்பான்மையோர் எடுக்கும் தீர்ப்புகளிலே கிடைக்கும் என்று பதில் சொல்கின்றார். மழையிலிருந்தும் தப்பிக்க ஆற்றங்கரையில் அடைக்கலம் தேடுவது என்கின்ற கதையைப் போல் இருக்கின்றது. இவருடைய கூற்று !

ஆக நாம் பார்த்தோம். ஐரோப்பிய சிந்தனையாளர்கள் இந்த உண்மையை உணர ஆரம்பித்திருக்க மாட்டார்கள். அதாவது

ஜனநாயக அமைப்பு முறையிலே பெரும் பான்மையோரின் தீர்ப்பு தான் சரியாக இருக்கும் என்று நினைப்பது எந்த வகையிலும் சரியில்லை.

ஒரு விஷயம் சரியா ? தவறா? என்பதை நிர்ணயிப்பதற்கு ஒரு அளவுகோல் தேவைப்படுகின்றது. -- *லாக்* -- உடைய பார்வையிலே வெளியே இருக்கின்ற இந்த அளவுகோலுக்கு பெயர் -- இயற்கை சட்டம் -- என்பதாகும். *பேராசிரியர் கோபின்* இதை ஒழுக்க மாண்புகள் என்று அழைக்கின்றார். புகழ் பெற்ற இத்தாலிய சிந்தனையாளர் *Mazeni* இந்த விஷயத்திலே இவ்வாறு கூறுகின்றார்.

-- பெது வாக்கெடுப்பு அல்லது பொது கருத்து என்ற கோட்பாடு மிகவும் நல்லது என்பதிலே எந்த சந்தேகமும் இல்லை. இந்த அமைப்பு முறையை கடைபிடிப்பதனால், ஒரு சமுதாயம் தொடர் ஆபத்திலிருந்து தன்னை காப்பாற்றிக் கொள்ள முடியும். தன்னுடைய ஆட்சியை தானே அமைத்துக் கொள்ள முடியும்.

ஆனால் எந்த சமுதாயத்திலே அதன் நம்பிக்கைகளிலே ஓர்மை இல்லையோ, ஒற்றுமை இல்லையோ, அப்படிப்பட்ட சமுதாயத்திலே ஜனநாயகம் என்பது இதை விட அதிகமாக ஒன்றும் செய்ய முடியாது. அதாவது பெரும்பான்மையோரின் நலன்களைக் காக்க சிறுபான்மையோரை அது அடக்கி வைக்கும். ஒன்று நாம் இறைவனுக்கு அடியார்களாக இருக்க முடியும். மனிதன் தனிப்பட்டவனாக இருந்தாலும் சரி, அவன் பெரும்பான்மையாக இருந்தாலும் சரி, விஷயம் ஒன்று தான். மனிதர்கள் மீது ஒரு உச்ச கட்ட அதிகாரம் படைத்தவன் இல்லாவிட்டால், பலம் வாய்ந்தவர்களின் இரும்பு கரங்களிலிருந்து நம்மைக் காப்பாற்ற வேறு எந்த பொருள் தான் நம்மிடம் மிஞ்சி நிற்கும் ?

நம்மிடம் ஒரு புனிதமான நேர்மையான மாற்ற முடியாத, மாற்றத்திற்கு ஆளாகாத ஒரு நிரந்தர சட்டம் இருக்க வேண்டும். அது மனிதர்களால் உருவாக்கப்பட்ட சட்டங்களாக இருக்கக் கூடாது. அப்படி இல்லையென்றால், ஒரு செயல் சரி தானா? அல்லது தவறானதா? என்பதை உரசிப்பார்க்க, எடை போட்டு பார்க்க நம்மிடம் எந்த உரைக்கல் அல்லது துலாக்கோல் இருக்கின்றது?

இறைன் அல்லாத எந்த ஆட்சிமுறை அமைந்தாலும் அதன்

விளைவுகளின் உண்மை ஒன்று போலவே இருக்கும். அந்த அரசாங்கத்தின் பெயர் -- *போனாபார்ட்* -- ஆக இருந்தாலும் சரி அல்லது -- *சோவியத் புரட்சியாக* -- இருந்தாலும் சரி. அதன் மத்தியிலே இறைவன் இல்லாமல் போனால் அது தன்னுடைய ஆட்சி காலத்திலே அதிலுள்ள ஒவ்வொருவரும் அநியாயக்காரனாக கொடுமைக்காரனாக மாறிவிடுவர்.

ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, அது இறைவனின் சட்டங்களின் பிரகாரம் நடைபெறவில்லை என்றால், அதற்கு ஆட்சி செய்வதற்கு எந்த உரிமையும் இல்லை. அரசாங்கம் என்பது இறைவனின் விருப்பத்தை நிறைவேற்ற வைப்பதற்கும் அதை நிலைநாட்டுவதற்கும் பெயரே ஆகும்.

அதனால் இந்தக் கடமையை நிறைவேற்ற முடியவில்லை என்றால், இது உங்களுடைய உரிமை மட்டுமல்ல கடமையுமாகும். நீங்கள் இப்படிப்பட்ட ஆட்சியை மாற்றிவிட வேண்டும். (Quoted by griffith in interpretters of man பக்கம் : 46)

அதாவது *மெக்னியுடைய* பார்வையில், சரி அல்லது தவறின் அளவுகோல் இறைவனின் சட்டங்களாக இருக்க வேண்டும் . அதை நிலைநாட்டுவது தான் அரசாங்கத்தின் கடைமயாகும். இந்த இறை சட்டங்கள் மதங்களிடமிருந்து தான் பெற முடியும் என்பது வெள்ளிடை மலை . ஆனால் ஐரோப்பியாவிலே எந்த மதம் அதாவது கிறிஸ்துவ மதம் நடைமுறையில் உள்ளதோ, அதனுடைய நிலைபாடு எவ்வாறு உள்ளதென்றால், பேராசிரியர் -- *ஜோடு* -- கூறுகின்றார்.

-- கிறிஸ்துவ மதத்தின் பிரகாரம் நம் உண்மையான வாழ்வின் இருப்பிடம் இந்த உலகில்லை. மாறாக வரப்போகின்ற உலகமாகும். மறுமை உலகம் என்பது நன்மைகளைக் கொண்ட சிறப்பான உலகமாகும். அதற்குப் பதிலாக இந்த உலகமென்பது தீமையும், குழப்பங்களையும் கொண்ட உலகமாகும்.

அந்த உலகின் வாழ்வே நிரந்தரமானதாகும். இந்த உலக வாழ்வோ, ஒரு இடைக்கால வாழ்வாகும். மனிதனுக்காக இந்த உலகம் என்பது வர இருக்கின்ற உலகத்தின் தயாரிப்பிற்கான இடம் ஆகும்.

இந்த உலகிலே எந்த பொருளும் அடிப்படையிலே நல்லதாகவோ, அல்லது தூய்மையானதாகவோ, இல்லை. நாம் பார்க்கும் பொருள்களிலே எது நல்லது என்றால், எது வருங்கால உலகிலே வாக்களிக்கப்பட்டிருக்கின்றதோ, அந்த அருட்கொடைகளை பெறுவதற்காக, இந்த உலகின் எந்த பொருள்கள் பயன் தருமோ, அந்த அந்த பொருள்கள் மட்டுமே நல்லவைகளாகும். (Guide to the philosophy of morals and politics . பக்கம் : 27)

-- நியாயம், நீதி என்ற கண்ணோட்டத்தை கிறிஸ்துவ மதம் அறிந்து வைத்திருக்கவில்லை. சிந்தனை ரீதியான நேர்மை, நாணயம் அதற்கு என்னவென்று தெரியாது. இது அதனுடைய ஒழுக்க மாண்பு கோட்பாடுகள் என்ற கண்ணோட்டத்திற்கு அப்பாற்பட்ட விஷயமாகும். நீதி, நேர்மை, சத்தியம் போன்ற விஷயங்களிலிருந்து கிறிஸ்துவ ஆத்மா உணர்வற்று கிடக்கின்றது. (Quoted by Brifault the making of humanity. பக்கம் : 334)

புகழ் பெற்ற சிந்தனையாளர் பேராசிரியர் *மைக் ஹெட்* எழுதுகின்றார்.

-- பைபிளிலே எப்படிப்பட்ட ஒழுக்கக் கோட்பாடுகள் தரப்பட்டுள்ளன என்றால், அதை இன்றைய சமுதாயத்திலே அமுல்படுத்துவோமேயானால், அதன் விளைவு உடனடியாக மரணத்தை தவிர வேறு எதுவும் இருக்க முடியாது.

(adventure of ideas பக்கம் : 16) கலாச்சாரங்களை ஆராயும் புகழ் பெற்ற அமெரிக்க வரலாற்றாசிரியான Drospey தன்னுடைய நூலான Civilization - ல் எழுதுகின்றார்.

-- கிறிஸ்தவ மதம் என்பது தோல்வியாளர்களின், தோற்றுப்போனவர்களின் மதம் என்று இன்றைக்கு இலட்சக்கணக்கான மக்கள் நம்புகின்றார்கள். இந்த மதத்தை ஏற்றுக் கொள்வதும், தோல்வியை ஏற்றுக் கொள்வதும் ஒன்று என்று நினைக்கின்றார்கள். இங்கே எந்த விஷயமும் திருப்பதிக் கொள்ளும் அளவிற்கில்லை. -- இங்கே திருப்தி அடைவதற்கான ஆசை அசத்தியமானது என்றும், கருதப்படுகின்றது. -- இந்தக் கண்ணோட்டம் சரியான ஆரோக்கியமான வாழ்வை, ஆகாததாக ஆக்கிவிடுகின்றது. இதனால் மனிதத்தன்மை அழிவுக்குள்ளாக்கி விடுகின்றது. -- பக்கம்

எந்த அளவுகோலை --மீஸேனி-- சரி அல்லது தவறு என்று தெரிந்துக் கொள்வதற்கு . எதை மாற்றத்திற்கு ஆளாகாத நிலையான உபாயமாக கருதுகின்றானோ, அந்த இறைவனின் சட்டங்கள் பிரச்சனைகளுக்கு தீர்வுகளுக்கான மாற்று கதவுகளை தட்டுவதை தவிர ஐரோப்பியாவிற்கு வேறு வழியில்லாமல் போய் விட்டது. அந்தக் கதவு தான் ஐக்கிய நாடுகளின் சபை (U.N.O) ஆகும். இந்த ஐ.நா சபை மனிதர்களின் அடிப்படை உரிமைகளை பற்றி ஆராய ஒரு கமிஷன் நியமித்தது. 1948 ம் ஆண்டில் இந்த கமிஷன் பரிந்துரையின் அடிப்படையில் மனித உரிமைகளுக்கான அரசியல் சாசனம் (Declaration of human rights) வெளியிடப்பட்டது.

ஒவ்வொரு நாட்டிலும் ஆட்சியிலும் ஒவ்வொரு மனிதனுக்கு கிடைக்கக் கூடிய மனித உரிமைகளின் பட்டியலை ஐ.நா சபை வெளியிட்டது. ஐ.நா சபையின் இந்த சாதனை இன்றைய காலத்தின் மகிப் பெரிய வெற்றி என்று கருதப்படுகின்றது.

அநியாயத்திற்கு ஆளானோர், அக்கிரமம் செய்யப்பட்டோர், ஆகியோருக்கு இது மிகப் பெரிய ஆறுதலை தரும் என்கின்றார்கள். ஏதோ ஒரு வகையிலே மனிதர்களுக்கு தங்களுடைய அடிப்படை உரிமைகளுக்கான உத்தரவாதமாவது கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இந்த நம்பிக்கையும் பொய்யாகிப் போனது.Unescoஎன்பது ஐ.நா.சபையுடைய ஒரு நிறுவனமாகும். ஒரு பக்கம் மனித உரிமைகளுக்கான அரசியல் சாசனம் தயாராகிக் கொண்டிருந்தது. இன்னொரு பக்கம் Unesco வின் சார்பில் உலகிலுள்ள பல்வேறு அறிவு ஜீவிகளிடம் ஒரு கேள்வி அனுப்பி வைக்கப்பட்டது.

ஐ.நா சபை சொல்லும் இந்த மனித உரிமைகளைப் பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன, இதற்கு கிடைத்த பதில்களை Mr. Jaques Martain ன் தன்னுடைய முன்னுரையோடு என்ன எழுதியுள்ளார் என்பதைப் பார்ப்போம்.

--இது நிச்சயமான உண்மை தான். இந்த உரிமைகளெல்லாம், மனித உரிமைகள் தாம். ஆனால் மற்ற அனைத்து மனித

உரிமைகளைப் போல இவற்றின் மீதும் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். இவைகள் திருத்தக் கூடியவைகள். மாற்றக் கூடியவைகள் என்று அறிவிக்க வேண்டும். -- பக்கம் 10

அதற்கடுத்து Modern Qaurterly என்ற பத்திரிகையின் ஆசிரியர் John Lewis தன்னுடைய ஆய்வுக் கட்டுரையின் ஆரம்பத்தில் இவ்வாறு எழுதுகின்றார்.

-- இந்த உண்மை இப்பொழுது எல்லா இடங்களிலும் ஒப்புக் கொள்ளப்பட்டு வருகின்றது. அதாவது மனித உரிமைகள் நிலையானவை. அவை மனிதனுடைய இயற்கையிலே அது மறைந்துள்ளன. சமுதாயம் என்ற அளவிலே மனிதன் இன்னும் நாகரிகம் அடையாத காலத்திலிருந்தே இது தொடங்கப்பட்டன என்ற கண்ணோட்டங்களெல்லாம் வெறும் கதைகளாகும். பக்கம் - 51

சிகாகோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் Jerard எழுதுகின்றார். --மனித உரிமைகள் என்பது மனிதனுக்கும், அவனுடைய சமுதாயத்திற்கும் இடையே தொடர்புகளை நிரணயிக்கும் முயற்சிகளுக்குப் பெயராகும். அது நிலைத்த சட்டங்களாக இருக்கும்.

அவைகள் மாற்றத்திற்கு ஆளாகாது, என்ற எந்த வித உத்திரவாதமும் இல்லை. மனித உரிமைகள் பாதுகாப்பு என்ற விஷயத்திலே Mareitain எழுதுகின்றார். --மனித உரிமைகளின் விஷேசங்களைப் பற்றியல்ல இங்குள்ள விவாதம். அன்றாட வாழ்வில் அவற்றை எப்படி பயன்படுத்த வேண்டும் என்ற பிரச்சனையில் ஒன்றுபடுவதற்கு முதல் நிபந்தனை யாது எனில், முதலில் அதன் மாண்புகளின் அளவுகோல்கள் மீது ஒற்றுமை வரவேண்டும். மனித உரிமைகள் போற்றப்பட வேண்டும் என்றால், அதற்குத் தேவை மக்களின் முன்னால், மனித வாழ்வின் ஒரு செயல் அளவிலான ஒருமித்த கண்ணோட்டம் இருக்க வேண்டும். இதற்கு தான் வாழ்வின் தத்துவம் என்று அழைக்கின்றார்கள். (பக்கம; 17) இதே உண்மையை பேராசியர் *ஜோட்* தன்னுடைய மொழியிலே சொல்கின்றார்.

-- நல்வாழ்வுக்கு அர்த்தம் என்ன வென்றால், மனிதன் நிரந்தர மாண்புகளை அடையவேண்டும். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இது ஒவ்வொரு நாட்டின் அரசின் கடமையாகும். அது

எப்படிப்பட்ட சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும் என்றால், இதனால் மனிதனுக்கு நிரந்தர மாண்புகளை அடைந்துக் கொள்வது எளிதாகி விடவேண்டும். ஒரு ச மூகத்தின் வெற்றிக்கு இதுவே அளவுகோல்களாகும்.
(Guide to the Philosophy of Morals and politics . பக்கம் : 806

ஆக விஷயம் தெளிந்து சுருக்கமாக முன்னால் வந்து விட்டது. அதாவது மனிதர்களின் இந்த பிரச்சனைகளுக்கான தீர்வு இதை தவிர வேறொன்றும் இல்லை . அதாவது அவர்களுக்குள்ளே எழுகின்ற பரஸ்பர பிரச்சனைகளை நிரந்தர மாண்புகளின் பிரகாரம் அவர்கள் தீர்த்துக் கொள்ள வேண்டும். இந்த மாண்புகளை தான் ஒரு விஷயம் சரியா அல்லது தவறா என்பதை நிரணயிக்கும் அளவு கோலாக கொள்ள வேண்டும்.
இது தான் மனிதனின் இந்த இறுதி இலக்கு. பல ஆயிரமாண்டுகளின் தொடர் முயற்சிகள் அனுபவங்கள் ஆகியவற்றுக்கு பின்னால் அவன் இந்த இலக்கை அடைந்துள்ளான். இங்கே வந்த பின்னாலும், அவன் திக்கு தெரியாமல் ஆச்சரியக் குறியாக நிற்கின்றான்.

ஏனெனில் இந்த நிரந்தர மாண்புகள் அவனுக்கு எங்கிருந்து கிடைக்கும் என்று தெரியவில்லை. அவன் தன்னுடைய அறிவை பயன்படுத்தி சில மாண்புகளை உருவாக்க முயற்சிக்கின்றான். ஆனால் ஒரு மாண்பு இன்னொரு மாண்பை ரத்து செய்துவிடுகின்றது.

இரண்டாம் பாகம்

இறைவன் என்ன கூறுகின்றான்

திருக்குர்ஆன் இந்த உண்மையை ஏற்றுக்கொள்கின்றது. மனிதனை அவனுடைய நிலையிலே விட்டுவிட்டால், அவனால் சமூக வாழ்வு வாழ முடியாது. ஏனென்றால் மனிதன் மிகப் பெரிய கலகக்காரனாக இருக்கின்றான்.

இவன் அவசரக்காரனாக, பொறுமையற்றவனாக

இருக்கின்றான். திருக்குர்ஆன் 18: 54

மனிதன் அவசரக்காரனாக இருக்கின்றான். 100: 8

அவன் குறுகிய பார்வையுள்ளவனாக இருக்கின்றான். 17:11

அவன் பொருளை நேசிப்பதில் அளவு கடந்தவனாக இருக்கின்றான். 89: 20

செல்வத்தை முடிச்சு போட்டு வைத்துக் கொண்டு அது மற்றவர்களிடம் போய் சேர விடாமல் தடுத்து விடுகின்றான் 70: 18

அவனை ஒரு நன்மை தொடுமானால், அது பிறருக்கு கிடைக்காதவாறு தடுத்து விடுகின்றான். 70: 21இங்கே ஒரு உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும்.

மனிதனைப் பற்றி திருக்குர்ஆன் இவ்வாறு சொல்கின்றது. ஆனால் மனிதன் <u>இயற்கையிலே இப்படித்தான் படைக்கப்பட்டுள்ளான் என்பது இதற்கு அர்த்தமல்ல. நிச்சயமாக அல்ல (மனிதன் எந்த இயற்கை தன்மையையும் தன்னுடன் கொண்டு வருவதில்லை. இவன் வெள்ளை காகிதத்தைப் போன்றவன் ஆவான்.)</u>

உண்மை எதுவென்றால், தன்னை பாதுகாத்துக் கொள்ளும் உணர்வு Preservation of self ஒவ்வொரு உயிருள்ள பொருளுக்குள்ளும் தரப்பட்டுள்ளது. மனிதனை தவிர எத்தனை உயிரினங்கள் இருக்கின்றனவோ, அவர்களுடைய இந்த போராட்டத்தின் எல்லையை இயற்கை தானாகவே கட்டுபடுத்தி வைத்துள்ளது.

இதை அவற்றின் உள்ளுணர்வு அல்லது (Instinct) என்று அழைக்கின்றார்கள். எந்த உயிரினத்திற்கும் இந்த வட்டத்திலிருந்து வெளியே வருவதற்கு அதிகாரம் தரப்படவில்லை.

ஆகவே விலங்கினங்களினால் உலகில கலகங்களோ, கலவரங்களோ, ஏற்படுவதில்லை. ஆனால் மனிதன்

அதிகாரமுள்ளவனாக படைக்கப்பட்டுள்ளான். ஆகவே தன் இச்சைகளை தணித்துக் கொள்ளும் விஷயத்தில் எல்லைகளைக் கடந்து விடுகின்றான்.

இதனால் தான், தனிப்பட்ட சண்டைகளையும், சச்சரவுகளையும் தீர்க்கும் பணி யாரிடம் தரப்படுகின்றதோ, அவர்கள் தங்களை தாங்களே அதிகாரிகளாகவும், மற்றவர்களை அடிமைகளாகவும் கருத ஆரம்பித்துவிடுகின்றார்கள்.

பிறகு அதிகாரத்தில் அவர்கள் கண்ட சுவை தங்களுடைய அதிகாரத்தின் முடிச்சுகளை இன்னும் அதிகமாக இறுக்கிக் கொண்டே செல்ல வேண்டும் என்று அவர்களை தூண்டுகின்றது. நீங்கள் எப்படிப்பட்ட பணிகளை செய்ய வேண்டும் என்றால், இதனால் அதிகாரமென்பது எங்கள் கைகளிலிருந்து நழுவிவிடக் கூடாது என்று அந்த ஆதிக்க உணர்வு அவர்களுக்கு சொல்லி தருகின்றது.

ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற கொள்கை, அடிப்படையிலே தவறானது என்பதை சொல்லிக்காட்ட, திருக்குர்ஆன் இந்த உண்மையை பிரகடனம் செய்கின்றது.

நாம் ஆதமுடைய சந்ததிகளை சரிசமமாக, கண்ணியததிற்குறியவர்களாக படைத்திருக்கின்றோம். ஆகவே ஒரு மனிதன் இன்னொரு மனிதனை தன்னை ஆளுபவனாகவும் மற்றவர்களை அடிமைகளாகவும் கருதுவதற்கு எந்த உரிமையும் இல்லை. தன்னுடைய ஆணைக்கு மற்றவர்கள் இணங்க வேண்டும் என்று நினைப்பதற்கு எந்த அதிகாரமும் இல்லை. 17: 70

ஒரு மனிதனுக்கு அல்லாஹ், வாழ்வின் கோட்பாடுகளையும் (வேதத்தையும் ஞானத்தையும்) தீர்ப்பளிக்கக் கூடிய சக்திகளையும் கொடுத்திருந்தாலும், அவர் அல்லாஹ்வை விட்டு என்னுடைய கட்டளைக்கு இணங்குங்கள், எனக்கு அடியார்களாகி விடுங்கள் என்று சொல்வதற்கு எந்த உரிமையும் இல்லை. 3: 79

ஆக இதில் முதல் விஷயம் யாதெனில், திருக்குர்ஆன் மனிதர்களுக்கு அதிகாரம் செலுத்தும் உரிமையை ஒரு காலமும்

தருவதில்லை. அவர் நபியாக (இறைத் தூதராக) இருந்தாலும் சரியே. ஆனால் இதனால் அரசியல் அமைப்பே தேவையில்லை என்று அது நினைக்கின்றது என்பது இதற்கு அர்த்தமல்ல.

இந்த அவசியத்தை திருக்குர்ஆன் நன்றாக உணர்கின்றது. இன்னும் அது மிக மிக அவசியம் என்றும் வலியுறுத்துகின்றத. ஆனால் அது சொல்கின்றது. இந்த அதிகாரம் இறைவனுக்கு மட்டும் தான் உண்டு. மற்ற யாருக்கும் இல்லை என்று அது பறை சாற்றுகின்றது.

அல்லாஹ் ஒருவனுக்கேயன்றி வேறொருவருக்கும் அதிகாரமில்லை. அவன் கட்டளையிடுகின்றான். அவனையன்றி வேறு யாருடைய அதிகாரத்தையும் நீங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஆனால் மனிதர்களில் பெரும்பாலானவர்கள் இந்த உண்மையை அறிந்துக் கொள்வதில்லை. 12: 40

அவன் தன்னுடைய அதிகாரத்தில் வேறு எவரையும் கூட்டாக்கிக் கொள்வதில்லை. இறைவன் என்பவன் ஒரு மறுக்க முடியாத உண்மையாகும். (Abstract reality) நாம் அவனை பார்க்கவும் முடியாது. அவனுடை குரலை கேட்கவும் முடியாது. ஆக நாம் நம்முடைய பிரச்சனைகளுக்கான தீர்வை அவனிடமிருந்து எவ்வாறு பெற முடியும்? அவனுடைய ஆட்சியை நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?

ஆகவே இறைவன் தெரிவித்து விட்டான். இந்த தீர்வுகள் அவனுடைய சட்ட திட்டங்களின் அடிப்படையில் (கிதாபுல்லாஹ்) பெறப்படும். எதை அல்லாஹ் (ஜல்) ரசூல் (ஸல்) அவர்கள் மீது இறக்கி வைத்தானோ, அது... இதை ரசூல் (ஸல்) அவர்களின் மூலமாகவே அறிவிக்கப்படுகின்றது.

நபியே! நீர் கூறும்! அல்லாஹ் அல்லாதவனையா தீர்ப்பளிக்கும் நீதிபதியாக நான் ஏற்றுக் கொள்வேன். அவன் தான் எல்லா விஷயங்களையும் நல்ல முறையில் விளங்கக் கூடிய வகையில் வேதத்தை அருளியிருக்கின்றான்.

ஆக இறைவனின் ஆட்சியை ஏற்றுக் கொள்கின்ற முறை இது தான். அதாவது அவனால் இறக்கியருளப்பட்டுள்ள வேதத்திலே

இருக்கின்ற சட்டங்களை பின்பற்றுவது, அந்த சட்டங்கள் அல்லாமல் வேறு எந்த சட்டத்தையும் பின்பற்றாமல் இருப்பது ஆகும். இதைப் பற்றி இறைவன் கூறுகின்றான்.

மனிதர்களே ! உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு இறக்கப்பட்டதை பின்பற்றுங்கள். அவனையன்றி வேறெவரையும் பாதுகாவலர்களாக்கிக் கொண்டு அவர்களை பின்பற்றாதீர்கள். இந்த உண்மையை உங்களில் ஒரு சிலர் தான் உணர்ந்திருக்கின்றார்கள். 7: 03

ஆனால் வேதத்திற்குள்ளே இருக்கின்ற சட்டங்கள் , அவற்றை தீர்மானிக்கும், தீர்ப்பளிக்கும் அல்லது செயல்படுத்தும் ஒரு Authority உருவாகாத வரை அவைகள் வெறும் கண்ணோட்டங்கள் (theoritical) என்கின்ற உருவத்தில் தான் இருக்கும். ஆகவே திருக்குர்ஆன் இதற்காக ரசூல் (ஸல்) அவர்களை Authority யாக அறித்தது. ஏனெனில் ரசூல் (ஸல்) அவர்கள் உயிரோடு இருக்கும் பொழுது வேறொருவருக்கும் authority தர முடியாது.

எவர் தூதருக்கு கீழ்படிகின்றாரோ, அவர் அல்லாஹ்வுக்கு கீழ்படிகின்றார். 4:80

இந்த அமைப்பின் அவசியத்தை இந்த வசனத்தின் மூலம் வலியுறுத்தப்படுகின்றது.

உம் இறைவன் இதன் மீது சாட்சியாக இருக்கின்றான் . அவர்கள் தங்களிடையே எழுந்த சச்சரவுகளில் உம்மை நீதிபதியாக ஏற்ற பின்னர் நீர் தீர்ப்பு செய்வது பற்றி எத்தகைய அதிருப்தியையும் கொள்ளாத வரையிலே, அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக ஆக மாட்டார்கள். 4:65

ஒரு பக்கம் முமின்களிடம் அதாவது இஸ்லாமிய ஆட்சியின் பிரஜைகளிடம் இவ்வாறு கூறப்படுகின்றது. இன்னொரு பக்கம் ரசூல் (ஸல்) அவர்களுக்கு (அதாவது தீர்ப்பளிக்கும் (Authority) க்கு எச்சரிக்கப்படுகின்றது.

அல்லாஹ் அருள் செய்த சட்ட திட்டங்களை கொண்டு அவர்களிடையே நீர் தீர்ப்பு செய்வீராக! (கிதாபுல்லாஹ்)

உம்மிடம் சத்தியம் வந்து விட்டது. அதிலிருந்து விலகி அவர்களுடைய மன இச்சைகளை நீர் பின்பற்ற வேண்டாம்.
5:48

இந்த விளக்கங்களிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், திருக்குர்ஆன் எப்படிப்பட்ட அமைப்பு முறையை நிர்மாணிக்கின்றது என்றால், இதன் பிரகாரம் அரசாங்கத்தின் தலைமை ஸ்தானத்திற்கு இந்த Authority இல்லை.

1) அவர்கள் மக்களுக்கு ஏற்படும் சர்ச்சைகளை தீர்த்து வைப்பதற்கு தன்னுடைய சொந்த ஆணையை பின்பற்ற சொல்ல முடியாது.

2) எந்த சட்டங்கள் கிதாபுல்லாஹ் (இறை வேதத்தில்) அருளப்பட்டிருக்குமோ, அவற்றிற்க்கு மாற்றமாக தீர்ப்பு அளிக்க முடியாது. (அனுமதியில்லை)

இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், உச்ச கட்ட அதிகாரம் என்பது, சட்டத்தை இயற்றும் அதிகாரத்திற்க்கு சொல்வோமேயானால், திருக்குர்ஆனுடைய அரசியல் அமைப்பு முறையில் இது போன்ற அதிகாரம் மக்களின் தீர்ப்புக்கும் இல்லை. (General will of the people) அல்லது தனி நபருக்கும் இல்லை. இந்த உரிமை இந்த அதிகாரம் இறைவனுக்கு மட்டும் தான் உண்டு. இதன் செயல்வடிவம், இறைவனின் வேதமாக இருக்கின்றது.

இன்னொரு விஷயத்தையும் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த அமைப்பு முறையிலே யாருக்கும் Divine Rights அதாவது இறைவனால் அருளப்பட்ட அதிகாரம் இருப்பதில்லை. இதில் யார் மிகப் பெரிய Authority யாக இருக்கின்றாரோ, அவரே இறைவனின் சட்டங்களுக்கு கீழ்படிகின்றார்.

இறைவனின் பெயரால் தன்னுடைய ஆணைகளை அவர் பிறப்பிப்பதில்லை. ஆகவே ரசூல் (ஸல்) அவர்களைப் பற்றியே கூறப்படுகின்றது.

எது உமக்கு வஹியின் மூலமாக (இறைவனின் செய்தியாக)

தெரிவிக்கப்படுகின்றதோ, அதையே பின்பற்றுவீர். 10: 109

மனிதனுக்கு இறை அதிகாரங்கள் இருக்கின்றன என்ற கண்ணோட்டம் திருக்குர்ஆனுடைய அமைப்பு முறைக்கு எவ்வளவு தொலையில் இருக்கின்றது என்பதை இந்த சம்பவத்தின் மூலம் தெரிந்துக் கொள்ளலாம்.

ரசூல் (ஸல்) அவர்களும் தன்னை ஒரு பொழுதும் *கலீபதுல்லாஹ்* (இறைவனுடைய பிரதிநிதி) என்று அழைத்துக் கொள்ளவில்லை. இஸ்லாமிய ஆட்சி அல்லது அரசாங்கம் என்பது இறைவனின் சட்டங்களை அமுல்படுத்தக் கூடிய இன்னும் தன் அடியார்களுக்கான அந்த பொறுப்புகளை நிறைவேற்றித் தருகின்ற அமைப்பாக இருக்கின்றது. அது இறைவனுக்கு பதிலாக இன்னொன்று என்ற நிலைப்பாட்டினை கொண்டதாக இல்லை. இறைவனுடைய இடத்திலே இவர் என்ற கோட்பாடு இருக்கின்றதே, அது Theocracy (புரோகிதர்களால்) உருவாக்கப்பட்ட ஒன்றாகும். திருக்குர்ஆனுடைய பார்வையிலே இது பாதிலான, உண்மைக்கு புறம்பான கூற்றாகும்.

திருக்குர்ஆன் என்பது இறுதி வேதமாக இருப்பதனால், இது எல்லாக் காலங்களுக்கும், எல்லா நிலைகளுக்கும் எப்பொழுதும் வழிகாட்டக் கூடிய ஒரு வாழ்க்கை கோட்பாடாக இருக்கின்றது. இதில் சிலவற்றை தவிர மற்ற அனைத்தும் Theocracy அல்லது Formula அல்லது செயல்திட்டம் என்ற அளவிலே சட்டங்கள் தரப்பட்டிருக்கின்றவே தவிர அவற்றின் நுணுக்கங்களும், செயல்முறைகளும் நிர்ணயித்து சொல்லப்படவில்லை.

இவைகள் கோட்பாடுகள் என்ற அளவில் மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளன. அதே நேரத்தில் இவைகள் என்றைக்கும் மாற்ற முடியாதவைகள் என்பதையும் அழுத்தந்திருத்தமாக சொல்லப்பட்டுள்ளது.

உம்முடைய இறைவனின் வார்த்தை உண்மையாலும், நியாயத்தாலும் முழுமையாகிவிட்டது. அவனுடைய வார்த்தைகளை (சட்டங்களை) மாற்றுவோர் எவரும் இல்லை. (ஏனெனில் இந்தச் சட்டங்களை (மஆஸல்லாஹ், அல்லாஹ் மன்னிக்கவேண்டும்) எந்தக் குருட்டுத் தனமான சக்தியோ, அல்லது அறிவில்லாத

மனிதர்களோ உருவாக்கவில்லை.

இவற்றை யார் உருவாக்கியுள்ளன என்றால், யார் எல்லாவற்றையும் கேட்பவனாகவும், அறிபவனாகவும் இருக்கின்றானோ, அவன் உருவாக்கியுள்ளான்.

இந்த கலிமதுல்லாஹ் தான் (இறை சட்டங்களை) மாற்ற முடியாத கோட்பாடுகள் (Un - alterable principles) அல்லது நிரந்தர மாண்புகள் (Permanent Values) என்றழைப்பார்கள்.

இதை யாரும் மாற்ற முடியாது. ஒரு கட்சியின் 99 சதவித உறுப்பினர்கள் ஒரு பக்கமிருக்கட்டும். அல்லது மனித சமுதாயம் முழுவதும் 100 சதவிதம் வாக்களித்தாலும் இதில் எந்த வித மாறுதலும் செய்ய முடியாது.

இந்த மாற்ற முடியாத கோட்பாடுகளுக்குத் தான், *ஹுதூதுல்லாஹ்* இறைவனின் வரையறைகள் என்று அழைக்கின்றார்கள். இஸ்லாமிய அமைப்பு முறையின் தலைமை Authority யின் கடமை என்னவென்றால், இந்த வரையறைக்குள் (Boundry lines) இருந்துக் கொண்டு அரசாங்கத்தின் நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து தங்கள் காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப நடைமுறைச் சட்டங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இந்த கடமையை நிறைவேற்றத்தான் ரசூல் (ஸல்) அவர்களுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.

ஆட்சியின் சகல காரியங்களிலும் உம்முடைய நண்பர்களுடன் கலந்தாலோசனை செய்யவும். 3:159 திருக்குர்ஆன் இந்த ஆலோசனை கமிட்டியைப் பற்றி ஒரு குறிப்பிட்ட வடிவத்தை வரைந்துக் காட்டவில்லை. இதற்காக இஸ்லாமிய ஆட்சியானது தன்னுடைய காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப, அப்பொழுது இருக்கின்ற சூழ்நிலைகளுக் கேற்ப எந்த விதமான ஒரு குழுவை அமைத்துக் கொள்ள வேண்டுமோ, அமைத்துக் கொள்ளட்டும்.

மஷ்வரா செய்ய வேண்டும். (கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டும்) என்பது தான் திருக்குர்ஆனின் குறிக்கோளே தவிர, அதன் இயந்திரம் (Machinery) எப்படி இருக்க

வேண்டும் என்பது குர்ஆனின் நோக்கமல்ல.

இதிலிருந்து தெரிவது என்னவென்றால், இஸ்லாமிய அரசியலமைப்பு முறையில் சட்டத்தை இயற்றும் அதிகாரம், திருக்குர்ஆனிலே சொல்லப்பட்டுள்ள மாற்ற முடியாத கோட்பாடுகள் என்கின்ற நான்கு சுவர்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கும். இந்த நான்கு சுவர்கள் மாற்ற முடியாதவைகளாக, மாற்றத்திற்கு ஆளாகாதவைகளாக இருக்கும். இவற்றுக்குள் இருந்துக் கொண்டு தங்கள் கால சூழ்நிலைகளின் தேவைகளுக்கேற்ப நடை முறை சட்டங்களை இயற்றிக் கொள்ள சமுதாயத்திற்கு அதிகாரம் உண்டு. ஆக இப்பொழுது நீங்கள் பார்க்கின்றீர்கள். இந்த அமைப்பு முறையிலே சமுதாயத்தின் நிலை ஒரு Foot ball team போன்றதாகும்.

அது மைதானம் என்கின்ற நான்கு சுவர்களுக்குள் (Boundry Lines) இருந்துக் கொண்டு முழு சுதந்திரமாக விளையாடலாம். ஒருவருக்கொருவர் ஒருங்கிணைந்து ஒத்துழைத்து வாழ்க்கை என்கின்ற பந்தை அதன் Goal (இலக்கு) வரை கொண்டு செல்லலாம். இது தான் திருக்குர்ஆனிய ஜனநாயக அமைப்புமுறையின் சரியான கண்ணோட்டமாகும்.

நாம் ஏற்கனவே சொன்னோம். இந்த அமைப்பு முறையை முதன் முதலில் ரசூல் (ஸல்) அவர்கள் நிறுவிக் காட்டினார்கள். இது ஏதோ ஒரு இடைக்காலத்திற்கான ஆட்சி முறையாக இருந்ததில்லை. முழு மனித சமுதாயத்திற்காக நிரந்தரமான ஒன்றாக இந்த அமைப்பு முறை தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆகவே திருக்குர்ஆன் இதை விளக்கி சொல்லிவிட்டது. இது ரசூல் (ஸல்) அவர்களின் காலத்துடன் முடிந்து விடாது என்று! *ஆலெ இம்ரான்* அத்தியாயத்தில் வருகின்றது.

முஹம்மது (ஸல்) இறைவனின் தூதரேயன்றி வேறு அல்லர். அவருக்கு முன்னால் அல்லாஹ்வின் தூதர்கள் பலர் காலம் சென்று விட்டார்கள். அவர் இறந்து விட்டால், அல்லது கொல்லப்பட்டால், நீங்கள் உங்கள் குதிகால்களின் மேல் புறங்காட்டி திரும்பிவிடுவீர்களா ?

ஆகவே சமுதாயத்திடம் சொல்லப்பட்டது. ரசூல் (ஸல்) அவர்கள் மறைந்து விட்ட பின்பும் அமைப்பு முறையை தொடர்ந்து

முன்னே கொண்டு செல்லுங்கள். அதாவது திருக்குர்ஆன் நிர்ணயித்துள்ள மாற்ற முடியாத எல்லைகளுக்குள் இருந்துக்கொண்டு உங்களிடையே கலந்தாலோசிப்பதின் மூலம் நடைமுறை சட்டங்களை இயற்றிய வண்ணம் இந்த அமைப்பு முறையை தொடருங்கள்.

இந்த அமைப்பு முறையை கொண்ட சமுதாயத்தை பார்த்து சொல்லப்படுகின்றது.

இவர்களுடைய அமைப்பு முறை அவர்களுக்கிடையே, கலந்தாலோசிப்பதின் மூலம் நிர்மாணிக்கப்படுகின்றது. 42: 38 இதற்கு பெயர் தான் இஸ்லாமிய ஜனநாயகமாகும். இந்த ஜனநாயகத்தில்

1) இங்கே மேற்கத்திய ஜனநாயகத்தைப் போல் எல்லையற்ற அதிகாரங்களும் இல்லை. அங்கே எந்த சட்டமும் நிரந்தரமானதாகவோ, திருத்தங்கள் கொண்டு வராத வகையிலோ இல்லை. எது ஆளும் கட்சியாக இருக்கின்றதோ, அது தன்னுடைய பெரும்பான்மை பலத்தைக் கொண்டு எப்பொழுது வேண்டுமானாலும் எந்த சட்டங்களை வேண்டுமானாலும் இயற்றிக் கொள்ளலாம். எந்த சட்டங்களை வேண்டும் என்றாலும் ரத்து செய்யலாம் என்ற நிலையும் இங்கே இல்லை.

2) இங்கே சர்வாதிகாரத்திற்கோ, ஒருவர் அதிபர் ஆவதற்கோ, பலத்தை பிரயோகித்து மற்றவர்கள் மீது ஆட்சி செலுத்தவற்கோ இடமில்லை.

3) இங்கே Theocracy க்கு இடமில்லை. ஒரு நபருக்கோ, அல்லது ஒரு கூட்டத்தாருக்கோ இறைவனால் அளிக்கப்பட்ட அதிகாரங்கள் இருக்கின்றன என்ற பேச்சுக்கே இங்கே இடமில்லை. ஏனெனில் இங்கே மத புரோகிதத்தன்மைக்கு priest hood) க்கோ அறவே இடமில்லை.

4) இங்கே யூத மதத்தைப் போல கடுமையான ஷரியத் (மதச் சட்டங்கள்) அவைகள் மாற்ற முடியாததவைகள், நிரந்தர சட்டங்கள், இவைகள் இரும்பு காலணிகள், கால்களை வெளியே எடுக்கவே முடியாது என்ற கடுமையான நிலைகளும் இங்கே இல்லை.

இப்படிப்பட்ட அமைப்பு முறையில் ஒவ்வொரு மனிதருக்கும்

நிரந்தர உரிமைகள் இருக்கும். அதை யாராலும் மாற்றவோ, ரத்து செய்யவோ, முடியாது. அரசாங்கங்கள் அமையலாம். அரசாங்கங்கள் கலையலாம். மனிதர்கள் வருவார்கள். மனிதர்கள் போவார்கள். ஆனால் அந்த நாட்டில் வாழும் மனிதர்களுக்கு அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் முஸ்லிம் அல்லாதவர்களாக இருந்தாலும் எந்த உரிமைகள் அவர்களுக்கு இறைவனிடமிருந்து கிடைத்திருக்கின்றனவோ, அவற்றில் எந்த வித மாற்றமும் வராது.

எவ்வளவு பெரிய உத்தரவாதம் இது . எந்த நாட்டில் எந்த மக்களுக்கு இது போன்ற உத்தரவாதம் கிடைத்து விடுமோ, அந்த மக்களுக்கு எவ்வளவு பெரிய நிம்மதி கிடைத்து விடும். கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்.

இதில் கிடைக்கின்ற மிகப்பெரிய நன்மை எதுவென்றால், ஒரு மனிதன் மீது இன்னொரு மனிதன் ஆட்சி செய்ய முடியாது என்கின்ற உத்திரவாதம் தான். ஏனெனில் இந்த ஆட்சி முறையின் கீழ் வாழும் ஒவ்வொரு பிரஜையும் இந்த பிரகடனத்தை அடிக்கடி கேட்பான்.

Ash hadu anlla ilaha illellahu wahdahu la shareeke lahoo

நான் இதற்கு சாட்சி பகர்கின்றேன். நான் உரக்கமாக எல்லோரும் கேட்கும் வகையிலே பறைசாற்றுகின்றேன். உலகில் இறைவனை தவிர வேறு யாரும் ஆட்சியாளன் இல்லை.

மனிதர்களை தங்கள் கட்டளைகளுக்கு கீழ்படிய வைக்கும் அதிகாரம் அவனைத்தவிர வேறு யாருக்கும் இல்லை. இந்த உரிமை இறைவனுக்கு மட்டும் தான் உண்டு. இதில் யாரும் இணையில்லை.

இதில் யாராவது இணையாக முடியும் என்றால், அந்த உரிமை அந்த தகுதி, அல்லாஹ்வின் ரசூல் (ஸல்) அவர்களுக்கு மட்டுமே உண்டு. ஏனெனில் அவர்களை விட ஒரு உயர்ந்த அந்தஸ்த்துள்ளவரை மனித மூளையால் கற்பனையே செய்ய முடியாது. ஆனால் அவரைப்பற்றியும் சொல்லப்படுகின்றது.

நான் இதனையும் சாட்சி சொல்கின்றேன். உரக்கமாக உலகம் கேட்கும் வகையில் சொல்கின்றேன். முஹம்மத் (ஸல்) ஆகிய நானும் அல்லாஹ்வின் அப்த் (அடிமை), பிரஜை இன்னும் அவனுடைய தூதர்

ஆவேன்.

Ash hadu anne Mohammeden abduhu w arsoolhu (Arabic)

உலகில் மிகப்பெரிய அந்தஸ்த்தில் உள்ள அந்த மாமனிதரின் நிலையே இவ்வாறு என்றால், மற்ற மனிதர்களுக்கு எங்கிருந்து அனுமதி வந்துவிட்டது, அவனைப் போல் உள்ள மனிதர்கள் மீது அதிகாரம் செலுத்துவதற்கு? ரசூல் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை பின்பற்றுவது நம்முடைய கடமை என்றால், அதாவது நாமும் இறைவனின் கட்டளைகளுக்கு இணங்க வேண்டும். மற்றவர்களையும் இறை கட்டளைகளுக்கு இணங்க வைக்க வேண்டும்.

மக்களிடமிருந்து இந்தக் கேள்வி அடிக்கடி எழுகின்றது. Islamic idieology என்றால் என்ன? இந்த கேள்விக்கு பதில் என்னவென்றால், கலிமா தய்யிபா வின் இந்த புனிதமான தாரக மந்திரம் தான் Islamic Idiology ஆகும்.

அதாவது இணங்குதலும், அடிபணிதலும்,, கீழ்படிதலும் இறைவனின் சட்டங்களுக்கு மட்டுமே தவிர வேறு யாருக்கும் இல்லை.

Umirtthu wa ana avvalul Muslimeen (Arabic) 6: 163

அவனுக்கு வழிபட்டவர்களில், முஸ்லிமகளில் முதன்மையானவன் என்று கூறும்.

இத்தனை விஷயங்களை கேட்ட பிறகு, அந்த நிலை மாறாத, திருத்தங்கள் தேவைப்படாத, நிரந்தர தன்மைகள் வாய்ந்த, என்றைக்கும் எந்தக் காலத்திலும் மாற்ற முடியாத, மாற்றத்திற்கு ஆளாகாத அந்த சட்டங்கள் தான் எவை? அந்தக்கோட்பாடுகள் தான் எவை? என்று நாமும் பார்க்க வேண்டும் என்ற ஆசை உங்களுக்கு நிச்சயம் வந்திருக்கும். இந்த Permanent and absolute ஒழுக்க மாண்புகள், இஸ்லாமிய ஆட்சி நிறுவுவதற்கு மிகவும்

முக்கியமானவைகளாகும். பிறிதொரு சமயம் இதைப்பற்றி விரிவாக பார்ப்போம்.

சில முக்கிய மாண்புகளை மட்டும் சுருக்கமாக இங்கே பார்ப்போம். இதைப் பார்த்த பிறகு திருக்குர்ஆனிய அமைப்பைப் பற்றிய ஒரு கண்ணோட்டம் (Idea) உங்களுக்கு வந்து விடும்.

1-மனிதத்தை மதித்தல்

முதலில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்க மாண்பு இது தான்

Walaqad Karremna banee aadame (Arabic) 17:70

இதற்கு என்ன அர்த்தம் என்றால், ஒவ்வொரு மனித குழந்தையும் அவன் மனிதன் என்பதனால், சரிசமமாக கண்ணியத்திற்குரியவன் ஆவான். இதில் வர்ணம், இனம், சமுதாயம், மதம், கோத்திரம், சாதி, சம்பிரதாயம் ஆகிய பாகுபாடு எதுவும் இல்லை.

ஒவ்வொரு மனிதனும் அவன் மனிதன் என்பதனால் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவன் ஆவான். இந்த அடிப்படை ஒழுக்க மாண்பிற்கு இன்னொரு அர்த்தம் என்னவென்றால், உலகில் உள்ள எந்த அரசாங்கமும் இப்படி ஒரு சட்டத்தை இயற்ற முடியாது. அல்லது சமுதாயத்தில் இப்படி ஒரு மரபை கொண்டு வர முடியாது. மனிதன் பிறப்பால், சாதியால், அவன் செய்யும் தொழிலால், உயர்ந்தவன் என்றோ, தாழ்ந்தவன் என்றோ அறிவிக்க முடியாது. சமுதாயத்தில் மாண்பும், உயர்வும். மதிப்பும் ஒருவனுடைய செயலாற்றும் திறனை வைத்து தான் மதிக்கப்படும்.

Walikulli darajathuhun mimma amilu 46: 19

நீதி

2) எல்லா மனிதர்களையும் பிறப்பால் சரிசமமானவர்களாக, மதிப்பிற்குரியவர்களாக கருதுவது, ஒவ்வொருவருக்கும் அவருடைய ஆற்றலுக்கும் திறமைக்கும் ஏற்ப வாய்ப்புகளையும் வசதிகளையும்

உருவாக்கித் தருவது, அவருடைய செயலாற்றலுக்கேற்ப அவருடைய அந்தஸ்த்தை நிர்ணயிப்பது. யாருடைய உரிமைகளையும் அவர்களுடைய Dues களைப் பறிக்காமல் இருப்பது.

எல்லாப் பிரச்சனைகளையும் முறையாக சட்டப்படி தீர்த்து வைப்பது. எல்லோரையும் ஒரே மாதிரியாக கவனிப்பது. நீதி (அதல்) என்று அழைக்கப்படுகின்றது. இது திருக்குர்ஆனுடைய பார்வையில் இரண்டாவது முக்கிய ஒழுக்க மாண்பாகும். *நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறு ஏவுகின்றான்.* 16: 90

இஸ்லாமிய ஆட்சி எப்பொழுதும், எந்த நேரத்திலும் நீதி பரிபாலனத்தை கைவிடாது.

3. இஹ்ஸான்

3) சில நேரங்களில், இயற்கை குறைபாடுகளின் காரணத்தினாலோ, செயற்கையான விபத்துகளின் காரணத்தினாலோ, நிரந்தரமாக சிலர் ஊனமடைந்து விடுகின்றார்கள். இதனால் இவர்கள் மற்ற மனிதர்களைவிட பின் தங்கிவிடுகின்றார்கள்.

இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு திருக்குர்ஆனுடைய மொழியில் (இஹ்ஸான்) என்பார்கள். எங்கெல்லாம் திருக்குர்ஆன் (அதல்) நீதி பரிபாலனத்தைப் பற்றி வலியுறுத்தி சொல்கின்றதோ,அங்கே *இஹ்ஸானை* ஒரு நிரந்தர மாண்பாக அது சுட்டிக் காட்டுகின்றது. *இஹ்ஸான்* என்றால், *ஹுஸ்ன்* அழகை நிலைநாட்டுவது. அதாவது சமசீர்நிலையை உருவாக்குவது என்பது பொருளாகும்.

3. விரோதிகளிடமும் நீதியை பரிபாலிப்பது

அதல் லைப்பற்றி திருக்குர்ஆன் சொல்ல வரும்பொழுது இதையும் சேர்த்து சொல்கின்றது. அதாவது நீதி என்பது தங்களை சார்ந்தவர்களுக்கு மட்டும் செய்யப்படாது. எதிரிகளுடனும் நீதி பரிபாலிக்கப்படும் என்கின்றது திருக்குர்ஆன். சொல்லப்படுகின்றது.

எந்த ஒரு கூட்டதாரின் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களை தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்.

5:8

இதுவும் திருக்குர்ஆனின் ஒரு நிரந்தர மாண்பாகும்.

ட. பொறுப்பு

நீதி பரிபாலனம் நிலை பெற வேண்டும் என்றால் ஒவ்வொருவரும் தங்களுடைய பொறுப்புகளை தாங்களே ஏற்க வேண்டும். தனக்கு தரப்பட்ட ஒவ்வொரு பொறுப்புக்கும் அவன் பதில் சொல்ல வேண்டும். இது மிகவும் அவசியம். ஆகவே திருக்குர்ஆன் கூறுகின்றது.

ஒரு ஆத்மாவின் சுமையை இன்னொரு ஆத்மா சுமக்காது.

6: 154

இது குர்ஆனின் மிகவும் கண்டிப்பான முக்கியமான ஒரு ஒழுக்க மாண்பாகும். இந்தக் கட்டளை வாழ்வின் ஒவ்வொரு துறைக்கும் பொருந்தும். இதவும் ஒரு நிரந்தர மாண்பாகும்.

ந.மனித உரிமை

நாம் ஏற்கனவே பார்த்திருக்கின்றோம். திருக்குர்ஆனின் பிரகாரம் ஒரு மனிதர் இன்னொரு மனிதர் மீது அதிகாரம் செலுத்த முடியாது. ஒரு மனிதர் இன்னொரு மனிதரை அடிமைப் படுத்த முடியாது. இதுவும் ஒரு மாற்ற முடியாத சட்டமாகும். ஒவ்வொருவரும் இறைவனுடைய இந்த சட்டத்தை பின்பற்றித் தான் ஆக வேண்டும். இறைவனின் சட்டங்களுக்கு மாற்றமாக அவற்றுடன் மோதும் வகையில் யாரும் எந்த சட்டத்தையும் இயற்ற முடியாது. இந்த நிரந்தர மாண்புகளின் பிரகாரம் ஆட்சியை அமைக்கும் பொறுப்பு ஏதோ ஒரு தனிப்பட்ட நபருடையதோ, அல்லது ஒரு கட்சி, ஒரு இயக்கத்தினுடையதோ, அல்ல. இது முழு சமுதாயத்தின் பணியாகும். இந்த குறிக்கோளை வலியுறுத்தி திருக்குர்ஆன் கூறுகின்றது.

மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட சமுதாயங்களில் சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கின்றீர்கள். ஏனெனில் நீங்கள் இறைவனின் சட்டங்களை பின்பற்ற ஏவுவதும், அதற்கு மாற்றமாக

இதிலிருந்து இரண்டு விஷயங்கள் தெளிவாகின்றன. ஒன்று இஸ்லாமிய ஆட்சி என்பது எல்லோருடைய கூட்டான அமானிதமாகும். இரண்டாவது, சமுதாயம் என்பது எதற்காக உருவாகும் என்றால், *செயல்படுவதை தடுப்பதும் நீங்கள் கடமையாக கொண்டிருக்கின்றீர்கள்.* 3: 110

(Justification for existence) என்பதற்காக உருவாகும். இவர்களுடைய கரங்களால் மனித சமுதாயத்திற்க்கு நன்மைகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக உருவாகும்.

6. தகுதி, திறமை

அரசாங்கத்தை நடத்த வேண்டிய பொறுப்பு, உம்மத்தின் (சமுதாயத்தின்) கூட்டு பொறுப்பாக இருந்தாலும், சட்டம் ஒழுங்கு பராமரிப்பு போன்ற ஒவ்வொரு துறையையும் யாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதையும், பார்ப்பது அவசியமாகும். அவர்களிடம் அதற்கு தகுதி இருக்கின்றதா? என்பதை பார்த்து ஒப்படைக்க வேண்டும். இது மிக மிக அவசியமாக இருக்கின்றது.

அல்லாஹ் கட்டளையிருகின்றான். உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்கள் அதற்குரியவர்களிடம் ஒப்புவித்து விடுங்கள். 4: 58

இதுவும் ஒரு நிரந்தர மாண்பாகும். இதிலும் மாற்றம் செய்ய முடியாது.

7. அடிப்படை தேவைகளை பூ ர்த்தி செய்தல்

திருக்குர்ஆனின் பிரகாரம் இஸ்லாமிய ஆட்சியில் இதுவும் ஒரு முக்கிய பொறுப்பாகும். அதாவது தன் ஆட்சியின் கீழிருக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வது, அதாவது அவர்களுக்கு இதற்கான உத்திரவாதத்தை தரவேண்டும்.

Nahnu narzuqukum waiyyahum 6: 151

நாமே உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும்

உணவளிக்க பொறுப்பாளிகளாவோம். இதுவும் ஒரு அடிப்படை உரிமையாகும்.

இந்த உரிமை, நாட்டிலுள்ள அனைவருக்கும் சரிசமமாக வழங்கப்படுகின்றது. ஏதாவது ஒரு அரசாங்கத்தின் கீழ் அதன் நிர்வாகத் திறமின்மையாலும், அல்லது அவர்களிடம் நீதியில்லாத காரணத்தினாலும் ஒரு நபராவது பசியோடு இறந்து விட்டால், அந்த ஆட்சி இஸ்லாமிய ஆட்சியாக இருக்க முடியாது. கருத முடியாது.

இஸ்லாமிய ஆட்சி என்பது ஏதாவது ஒரு பகுதியில் இருந்து தான் ஆரம்பமாகும். அதை பாதுகாப்பது அந்த நாட்டிலுள்ளவர்களின் முக்கிய கடமையாகும். இந்த அளவிற்கு அதன் மீது பற்று வைப்பது (Patriotism) ஒரு போற்றுதலுக்குரிய உணர்வாகும்.

ஆனால் திருக்குர்ஆனின் உச்ச நிலை உணர்வு எதுவென்றால், இந்த அமைப்பு முறையை உலகளாவிய முறையிலே அனைத்து மனிதர்களுக்காகவும் பரப்பப்பட வேண்டும். இதனால் அனைத்து மனிதர்களும் உலகளாவிய சகோதரத்துவத்தின் அடிப்படையிலே ஒன்றுபட வேண்டும்.
ஆகவே கூறப்படுகின்றது.

7. Kanannasu Ummathuv vahida 2: 213 (Arabic)

எல்லா மனிதர்களும் ஒரே சமுதாயம் ஆவர். 2: 213 இது இதனுடைய நிரந்தர மாண்பாகும். ஆனால் திருக்குர்ஆன் இதை எப்படி விரும்புகின்றது என்றால், இதனுடைய நற்பலன்களைக் கண்டு சந்தோஷம் தரும் விளைவுகளைக் கண்டு மனிதர்கள் தானாக இதில் இணைய வேண்டும். இதனை யார் மீதும் பலவந்தமாக திணிக்க கூடாது . ஏனெனில்

8. La Ikrahe fiddeen 2:256

தீனுடைய விஷயத்தில் யாரையும் பலவந்தப்படுத்த முடியாது. யார் இந்த அமைப்பு முறையை ஏற்றுக்கொண்டே செல்வார்களோ, அவர்கள் ஒரு தனி சமுதாயத்தின் நபர்கள் ஆவார்கள். திருக்குர்ஆனின் பிரகாரம் சமுதாயம் அல்லது தேசியம் ஆகியவற்றின்

அமைப்புப் பணியின் அளவுகோல், அதாவது Idieology யும் ஒரு நிரந்தர மாண்பாகும்.

இப்படியாக மெள்ள மெள்ள எல்லா மனிதர்களும் ஒன்றுபட்டு தங்கள் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று அது விரும்புகின்றது. மனித குலத்தின் இப்படிப்பட்ட ஒருமைப்பாட்டைத் தான், மேற்கத்திய சிந்தனையாளர்களும், அறிவு ஜீவிகளும் செயலளவிலே பார்ப்பதற்கு துடியாய் துடித்துக் கொண்டிருக்கின்றார்கள. *பேராசிரியர் ஜோமின்* தன்னுடைய நூலில் (ஏற்கனவே குறிப்பிட்டிருக்கின்றோம்.) கடைசி அத்தியாயத்தில் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

உலகிலுள்ள பிரச்சனைகளுக்கும், சோதனைகளுக்கும் சரியான தீர்வு இப்பொழுது முன்னால் வருகின்றது. அது என்னவென்றால், உலகளாவிய முறையிலே ஒரு அரசாட்சியை அமைக்க வேண்டும் என்பது தான் அந்தத் தீர்வு. பக்: 225

Mr Emery Reves என்பவர் The anatomy of peace என்ற தலைப்பிலே பயனுள்ள ஒரு சிறிய நூலை எழுதியுள்ளார். அதிலே அவர் கூறுகின்றார். நாம் Internationalism த்தை வைத்து நிறைய விளையாடிவிட்டோம்.

எந்த பிரச்சனை உலகத்தின் முன்னால் இருக்கின்றதோ, அது சமுதாயங்களால் தீர்த்து வைக்கக் கூடிய பிரச்சனைகளல்ல. (ஏனெனில் இந்த பிரச்சனைகளே சமுதாயங்களால் தான் உருவாகியுள்ளன) அந்தப் பிரச்சனை இது தான். Nationalism தேசியவாதம் என்ற கண்ணோட்டம் மனித சமுதாயத்திலே ஒரு பெரிய குழப்பத்தை உருவாக்கி விட்டது.

ஆகவே Nationalism - Inter nationalism ஆகி விட்டாலும் இந்த பிரச்சனைக்குத் தீர்வு எவ்வாறு காண முடியும்?

<u>மனிதர்கள் மத்தியில் உலகளாவிய ஒருமைப்பாட்டு தான் இந்த பிரச்சனைக்கு சரியான தீர்வாகும். அதாவது எப்படிப்பட்ட நம்பிக்கை அல்லது இயக்கம் இருக்க வேண்டும் என்றால், அது தேசியவாதம் அல்லது சர்வதேசியவாதம் என்ற நிலைபாட்டிலிருந்து மேலே உயர்ந்து வெறும் மனித ஒருமைப்பாடு என்ற அளவிலே உலகில் அமைதியை</u>

நிலை நாட்ட விரும்ப வேண்டும். பக்கம்: 104

Mr. Reves இன்னொரு இடத்திலே எழுதுகின்றார். தெளிவான வார்த்தைகளிலே சொல்ல வேண்டுமென்றால், இருபதாம் நூற்றாண்டு ஏற்படுத்திய புரட்சிகரமான மாற்றங்களுக்கு பிறகு மனிதன் வேறு வழியில்லாமல் இந்த முடிவுக்குத் தான் வந்திருக்கின்றார்கள்.

அதாவது இந்த உலக மண்டலத்தை ஒரே ஆட்சியின் கொடையின் கீழ் கொண்டு வருவது மிகவும் அவசியமாகும். இது நம்முடைய கடமையாகின்றது. நாம் எப்படியாவது ஜனநாயக முறையிலே இந்த ஒரே ஆட்சியை நிறுவுவதற்காக முயற்சி செய்ய வேண்டும்.

இதற்காக இந்த ஆட்சி எப்படி அமைய வேண்டும் என்பதற்கான அடிப்படைக் கோட்பாடுகளை நாம் முதலில் அறிவித்து விட வேண்டும். யார் மீது இந்த ஆட்சி நிறுவப்படுமோ, அந்த மக்களை மெள்ள மெள்ள இதன் பக்கம் அழைக்க வேண்டும்.

இவ்வாறு நாம் செய்யாவிட்டால், இரத்தமின்றி, கலகமின்றி இந்த இலட்சியம் அடையவில்லை என்றால், பிறகு வரலாறு என்கின்ற இரும்புக்கரம் நம்மை பலவந்தப்படுத்தும். இரத்தம் சிந்தவும், இன்று இருப்பதை விட அதி பயங்கர ஆயுதங்களை உருவாக்கவும் அது நம்மைத் தூண்டும்.

எதற்காக என்றால், எல்லோரையும் விட அதிகம் பலம் பெற்றுள்ள கூட்டம் மற்றவர்களை அடக்கி ஒடுக்கி இந்த உலகத்திலே ஒரே ஆட்சியைக் கொண்டு வர முயற்சி செய்வதற்காக இவ்வாறு செய்யும். பக்கம்: 233

எந்த ஒரே ஆட்சிக்காக Mr. Reves ன் இதயம் இவ்வாறு துடியாய் துடிக்கின்றதோ, (நம்முடைய உள்ளமும் இவ்வாறு தான் துடிக்க வேண்டும்.) இதற்கான பிரகடனத்தை இன்றிலிருந்து 1400 ஆண்டுகளுக்கு முன்னாலேயே திருக்குர்ஆன்

La ilaha illallah (arabic)

லாஇலாஹ இல்லல்லாஹு என்கின்ற புரட்சிகரமான அறிவிப்பைக் கொண்டு உலகத்திற்க்கு அறிவித்து விட்டது. இந்த ஏகத்துவ தாரக மந்திரத்தின் அர்த்தம் என்னவென்றால், எல்லா மனிதர்களும் ஒரே அதிகாரத்திற்க்கு கட்டுப்பட்டு இருப்பார்கள். அந்த ஒரே ஆட்சி அல்லது ஏகத்துவ ஆட்சி எந்த மனிதனுடையதோ, அல்லது எந்த தனி கூட்டத்தினுடையதோ, இருக்க முடியாது.

மாறாக இறைவனுடையதாகத்தான் இருக்க முடியும். இந்த பேருண்மையை திருக்குர்ஆன் இவ்வாறு விளக்குகின்றது.

வெவ்வேறான ஆட்சிகள் இருப்பது நல்லதா? அல்லது யாவரையும் அடக்கி ஆளுகின்ற மிகப் பெரிய வல்லமையைக் கொண்ட ஒரே ஆட்சியாளரான அல்லாஹ்வின் ஆட்சி இருப்பது நல்லதா? 12: 39

ஆக திருக்குர்ஆனின் பிரகாரம் *தவ்ஹீத்* ஏகத்துவம் என்றால், ஒரே ஆட்சிமுறை என்று பொருள். *ஷிர்க்* என்றால், பல்வேறு ஆட்சிமுறைகள் என்று பொருள். ஆகவே திருக்குர்ஆன் கூறுகின்றது.

இறைவன் ஆணையிடுகின்றான். அவனையன்றி வேறு யாருடைய அதிகாரத்தையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று, அல்லாஹ்வுடைய அதிகாரத்தை மட்டும் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று இந்தக் கட்டளை, இந்த அறிவிப்பு ஒரு குறிப்பிட்ட நாடு அல்லது ஒரு குறிப்பிட்ட கூட்டத்தினருக்கோ சொல்லப்படவில்லை.

<u>முழு மனித குலத்திற்காக சொல்லப்பட்டது.</u>

மனிதர்களே ! எந்த அமைப்பு முறையை நான் கொண்டு வந்திருக்கின்றேனோ, அதன் சத்தியத்தன்மை மீது உங்களுக்கு சந்தேகம் இருந்தால், அதை ஏற்றுக்கொள்ளுமாறு நான் உங்களை கட்டாயப்படுத்தவில்லை. ஆனால்

நீங்கள் இறைவனை விட்டு எந்த அதிகாரத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றீர்களோ, அந்த அதிகாரத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. நான் அல்லாஹ்வின் ஆட்சியை மட்டும் தான் ஏற்றிருக்கின்றேன்.

அவன் எவ்வளவு அதிகாரமுள்ளவன் என்றால். உங்களுடைய வாழ்வும் அவனுடைய அதிகாரத்துக்குட்பட்டு தான் இருக்கின்றது.

எனக்கு கட்டளை இடப்பட்டுள்ளது. யார் இந்த ஆட்சியின் மீது முழுமையாக நம்பிக்கை வைத்திருக்கின்றாரோ, அவர்களுடன் இருக்குமாறு நான் கட்டளையிடப்பட்டுள்ளேன்.

என்னிடம் சொல்லப்பட்டுள்ளது. எல்லா விஷயங்களிலிருந்தும் என்முகத்தை திருப்பிக் கொண்டு இந்த அமைப்பு முறையை என்னுடைய இலட்சியமாக கௌ்ள வேண்டும் என்று! இன்னும் பல்வேறு ஆட்சிமுறைகளை கொண்டவர்களுக்கு அடிபணிந்து இணைவைப்பாளர்களுடன் ஆகி விடக்கூடாது என்றும் நான் தடுக்கப்பட்டுள்ளேன். 10:104, 105

இந்த ஒரே ஆட்சி தான், அந்த ஒருவனின் ஆட்சி தான். உலகளாவிய ஏகத்துவ சகோரத்துவ மனித ஒருமைப்பட்டுக்கு அடிப்படையாக உருவாக முடியும். இந்த கண்ணோட்டம் தான் இந்த ஆசை தான் பேராசிரயர் Harold Loski யின் உள்ளத்திலே அலை மோதிக் கொண்டிருந்தது.

அவன் கூறுகின்றான். உலகில் மனித குலத்தின் தேவை எதுவென்றால், ஒரு உலகளாவிய அமைப்பு முறையை உருவாக்க வேண்டும். உலகிலுள்ள அனைத்து மக்களும் அதன் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். Human Rights பக்கம்: 91

இதைப்பற்றி Mr. W.A. Gaurd தன்னுடைய நூலான Man Nature and Time ல் எழுதுகின்றார்.

வீடு இன்னும் நாடு என்ற உணர்வு தான் முதலில் நம் முன்னால் வருகின்றது என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் உலகளாவிய ஒரே மனித சமுதாயத்தில் நானும் ஒரு உறுப்பினன் என்ற கண்ணோட்டம் கண்களிலிலுருந்து மறையக் கூடாது.

இந்த உலகளாவிய அமைப்பு முறையின் உணர்வு இன்னும் முழு வீச்சுடன் நம் முன்னால் வரவில்லை. ஆனால் இதுவும் உண்மை தான். குறைந்த பட்சம் இப்படிப்பட்டவர்கள் ஒவ்வொரு

நாட்டிலும் இருக்கின்றார்கள்.

அவர்களுடைய உள்ளங்களிலே இந்த ஆசை அலை மோதிக் கொண்டிருக்கின்றது. இது நமக்கு இந்த உத்தரவாதத்தை தருகின்றது. அதாவது சிறிது காலத்திற்கு பிறகு இந்த எண்ணம், இந்த கண்ணோட்டம் செயலாக்கம் பெற்று விடும் என்பதில் சந்தேகமில்லை. பக்கம் :281 -284

திருக்குர்ஆன் சொல்கின்றது. இப்படிப்பட்ட ஒரு அமைப்பு முறை நிச்சயமயாக உலகிலே அமைந்தே தீரும் என்று ! இரத்தம் சிந்துவதனால் அல்ல. மாறாக சிந்தித்து பாருங்கள் சகோதரர்களே ஒரு முஸ்லிமல்லாத சிந்தனையாளர், வரலாற்றாசிரியர் என்ன கூறுகின்றார் என்பதை பார்த்தீர்களா?

அவர் சொல்கின்றார். நாம் தேசிய வாதம் என்ற நரகத்திலே வீழ்ந்து கிடக்கின்றோம். நம்மை நேர் வழி காட்ட நம்மிடம் எந்த வானுலக வெளிச்சமும் இல்லை. ஆனால் உங்களிடம் 1400 ஆண்டுகளாக இறைவன் ஏற்றி வைத்த ஒரு கலங்கரை விளக்கம் இருக்கின்றது. ஆனால் உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? குருடர்களாகிய எங்களுக்குப் பின்னால் நடந்து நரகத்தின் பக்கம் வந்துக் கொண்டிருக்கின்றீர்களே, நீங்கள் எங்களுக்கு வழிகாட்டியிருக்க வேண்டாமா? எங்களைப் பார்த்து சொல்லியிருக்க வேண்டாமா? மனிதர்களின் ஈடேற்றமும், சந்தோஷமும் உலகளாவிய சகோதரத்துவ அமைப்பு முறை என்கின்ற Idiology அடிப்படையில் தான் அமைய முடியுமே தவிர இன்னும் ஜாதி, மொழி, நாடு என்ற தேசிய, பிராந்திய வாதங்களின் கண்ணோட்டங்களால் மனித குலத்திற்கு மீட்சி ஏற்படாது என்று சொல்லியிருக்க வேண்டும்.

இந்த Idiology யின் அடிப்படையில் ஒரு சமுதாயத்தை உருவாக்குவது எங்களை பொறுத்தவரையிலே ஒரு புதிய பார்வையே அல்ல. மனிதனுக்கு வஹீ (இறைச் செய்தி) இறை வழிகாட்டுதல் எப்பொழுது முதலில் தேவைப்பட்டதோ, அன்றிலிருந்து இந்த தீனின் (மார்க்கத்தின்) அடிப்படையான முக்கிய அம்சமாக இது இருந்து வருகின்றது.

இந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் தான் நூஹ் (அலை) அவர்களுடைய மகனை பார்த்து சொல்லப்பட்டது. உன் தந்தையின் குமாரன் என்று சொல்லிக் கொள்ளும் தகுதி உனக்கு இல்லையென்று !

இந்த கண்ணோட்டத்தின் அடிப்படையில் தான், இப்ராஹீம் (அலை) அவர்கள் தன்னுடைய தந்தையையும், தன்னுடைய சமுதாயத்தையும் பார்த்து சொல்கின்றார். நீங்கள் ஏக இறைவனின் அந்த ஒரே ஆட்சியை ஏற்றுக் கொள்ளாத வரை உங்களுக்கும் எனக்கும் இடையில் தூரத்து உறவும் இல்லை. என்று !

இதே கொள்கையின் அடிப்படையில் தான் லூத் (அலை) அவர்களின் மனைவி அவருக்கு அந்நியனாகி விட்டாள்.

இதே கொள்கையின் அடிப்படையில் தான் மக்காவில் வாழ்ந்து வந்த குரேஷிகள், ரசூல் (ஸல்) அவர்களுடைய பனூ ஹாஷிம் என்கின்ற சொந்த கோத்திரத்திற்கு சொந்தக்காரர்களாக இருந்தும், மிக நெருங்கிய உறவினர்களாக இருந்தும் , (சிறிய தந்தை போன்றவர்கள்) ஒரே இனம், ஒரே நாடு, ஒரே மொழியினராக இருந்தும் அவர்கள் மாற்று சமுதாய மக்களாக கருதப்பட்டார்கள்.

ஹப்ஷ் (ஆப்பிரிக்கா) நாட்டின் கறுப்பர் பிலால் (ரலி) அவர்களும், ரோமபுரியின் சுஹைப் (ரலி) அவர்களும், பாரசீகத்தின் சல்மான் (ரலி) அவர்களும், முஸ்லிம் சமுதாயத்தின் சொந்த சகோதரர்களாக கருதப்பட்டார்கள்.

ஆனால் இன்றைக்கு அதே மார்க்கத்தின் பெயரை பயன்படுத்துபவர்களின் நிலைமை எவ்வாறு உள்ளதென்றால், சில இடங்களிலே இனத்தின் பெயராலும், தேசத்தின் பெயராலும், தனித்தனி சமுதாயங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் முஸ்லிம் அல்லாதவர்கள் எங்களைப் பார்த்து எச்சரிக்கின்றார்கள்.

உங்களுடைய இந்த போக்கு உங்களை அழிவுப் பாதயில் கொண்டு சென்றுவிடும். உங்கள் மத்தியில் உலகளாவிய மானிட சகோரத்துவத்தின் கோட்பாட்டைக் கொண்டு வாருங்கள். இதைத் தான் உங்களுடைய தீன் (மார்க்கம்) மனித குலத்தின் நன்மைக்காக தேர்வு செய்திருக்கின்றது. ஆக உலகத்தின் பார்வை முஸ்லிம்களின் பக்கம் தான் இருக்கின்றது. இப்பொழுது இருக்கின்ற கேள்வி முஸ்லிம்காளிய நாம் என்ன செய்யப் போகின்றோம்? என்பது தான்.

❖ ❖ ❖

இஸ்லாமிய வரலாற்றை 10 ஆண்டுகளுக்கு மேல் ஆராய்ச்சி செய்து எழுதிய மிஸ் ஹிட்டி என்ற வரலாற்றாசிரியர் இப்படி குறிப்பிடுகின்றார்.

''இஸ்லாம் வெற்றிக் கண்ட இடங்களில் வாழ்ந்த !மக்கள் இஸ்லாத்தை உடனேயே ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் உடனேயே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நிர்பந்திக்கவும் இல்லை. மாறாக பல ஆண்டுகள் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் இருந்த பின்னரே அந்த இடங்களில் வாழ்ந்த மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். காரணம் இஸ்லாமிய ஆட்சியாளர்களிடமிருந்து அவர்களுக்கு கிடைத்த நீதி. பாதுகாப்பு. அதனால் கிடைத்த நிம்மதி''

இன்று உலகின் முஸ்லிம்களை கொலை செய்து கொண்டிருக்கும் யூதர்கள் ஒரு காலத்தில் கிறிஸ்தவர்களால் அடித்து துரத்தப்பட்டார்கள். அவர்களை அரவணைத்து வாழ வைத்தது இஸ்லாமிய அரசியலமைப்பு தான். (Ref O.Jerussalam)

இப்படி அனைத்து தரப்பு மக்களையும் நீதியோடும், நிம்மதியோடும் வாழ வைத்த இந்த இஸ்லாமிய அரசியல் அமைப்பின் அடிப்படைகளை நாம் ஆய்வு செய்வது காலத்தின் கட்டாயம்.

திறந்த மனதுடன், மாச்சரியங்களை மூட்டை கட்டி வைத்து விட்டு இந்த அரசியலமைப்பை ஆய்வு செய்வோம். நன்றி : விடியல் வெள்ளி ஏப்ரல் 2004

நூல் விளக்கக் குறிப்புகள்

நூலின் பெயர் : திருக்குர்ஆன் சொல்லும் அரசியல் அமைப்பு முறை

தொகுப்பாளர் : எம். பி. ரபீக் அஹ்மத்

மொழி : தமிழ்

பதிப்பு : முதற்பதிப்பு

பதிப்பாண்டு : 2004

பக்கம் : 49

நூலின் அளவு : டெம்மி

எழுத்து : 11 புள்ளி

வெளியிடுவோர் : ரபீகே மில்லத் பப்ளிகேஷன்ஸ்
பழைய எண் : 24 புது எண் : 2
முக்தாருன்னிஸா பேகம் வீதி
6 வது லைன், அண்ணா சாலை,
சென்னை, 600 002
தொலை பேசி எண்: 28589604

ஒளியச்சு : ஜம்ஸ் கிராபிக்ஸ்,சென்னை – 5

அச்சு : தமிழ்நாடு உர்து பப்ளிகேஷன்ஸ்
சென்னை –2 Ph : ~~28580407~~ 4356872

விலை : ரூ 15